386

உ

வேலுமயிலும் துணை

பொதிகை அகஸ்திய மகாமுனிவாருளிச்செய்த

சடாக்ஷர அந்தாதி எனும்

ஆறெழுத்தந்தாதி

மூலமும் விரிவுரையும்.

சென்னை: கோல்டன் எலெக்ட்ரிக் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

O-,12AA D,S7
N22
59773

உ

வேலுமயிலும் துணை.

பொதிகை அகஸ்தியமகா முனிவாருளிச்செய்த

சடாக்ஷர அந்தாதி என்னும்

ஆறெழுத்தந்தாதி

மூலமும்

கண்டி கதிர்காமம்

வேலாயுத சுவாமிகள் செய்த

விரிவுரையும்.

ஆறுமுக சுவாமிகள் திருவுருவப்படம் யந்திரத்துடன்.

இது

திருப்போரூர்

துளசிங்க நாயகர் குமாரர்.

டி. கோபால் நாயகர்

அவர்களது

சென்னை: கோல்டன் எலெக்ட்ரிக் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy Right.

இதன் விலை] **1922.** [அணா 12.

ஆறுமுகசுவாமிகள்

சுப்பிரமணியர் யந்திரம்.

MADRAS



உத்தாரணசுலோகம்.

𑌪𑍍𑌰𑌣𑌵𑌂𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌮𑌧𑍍𑌯𑍇𑌚𑌷𑌟𑍍𑌕𑍋𑌣𑍇𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌕𑌂𑌤𑍍𑌰𑌿𑌕𑍋
𑌣𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌬𑍀𑌜𑌾𑌨𑍀 𑌹𑌂𑌸𑌸𑍍𑌸𑍋𑌹𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌲𑍇𑌸𑍍𑌵𑌰𑌾𑌣𑌿
𑌷𑍋𑌡𑌶𑌾𑌰𑍇𑌤𑍁 𑌤𑌤𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑍇𑌦𑍇𑌹𑌵𑌰𑍍𑌣𑌕𑌾𑌨𑍍 𑌸𑌵𑍀𑌷𑍁𑌦𑍍
𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑌿𑌵𑌿𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌪𑍍𑌰𑌣𑌵𑌤𑍍𑌰𑌯𑌂 𑌭𑍂𑌮𑍌𑌮𑌾𑌲𑌾 𑌕𑍁
𑌮𑌾𑌰𑌸𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑌿𑌂𑌶𑌤𑌿.

உத்தாரண சுலோகம்.

ப்ரணவம்-பிந்து, மத்யேச்ச சட்கோணே மூலமந்த்ரகம் த்ரிகோணே, ப்ராணபீஜானி ஹம்ஸ꞉ஸோஹே. சதுஷ்தளம் ஸ்வராணி ஸோடஸாரேது தத்வாஸ்ரே தேகவர்ணகான். சவீஷுதுவாதஸாங்காநி விதக்ஷு ப்ரணவத்திரயம் பூமௌ மாலா குமாரஸ்யா வர்ணம் ஸர்வேஷ்ட விம்ஸதி.

மாலாமந்திரம்.

𑌓𑌂 𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌯 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌾𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌶𑌤𑍍𑌰𑍁 𑌸𑌂𑌹𑌾𑌰 𑌕𑌾𑌰𑌣𑌾𑌯 𑌗𑍁𑌹𑌾𑌯 𑌮𑌹𑌾𑌬𑌲𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌾𑌯 𑌵𑍀𑌰𑌾𑌯𑌶𑍂𑌰𑌾𑌯 𑌭𑌕𑍍𑌤𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌾𑌯𑌬𑌾𑌲𑌾𑌯 𑌮𑌕𑍍𑌤𑌾𑌯 𑌮𑌹𑌾 𑌬𑌲𑌾𑌯 𑌧𑌨𑌾𑌯 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌯 𑌧𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌮𑌮 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾.

மாலா மந்திரம்.

ஓம், நமோ, பகவதே, சுப்ரமண்யாய, ஷண்முகாய, மஹாத்மனே, ஸர்வ, சத்ரு ஸம்ஹார, காரணய குஹாய, மஹாபல, பராக்ரமாய, வீராய, சூராய, பக்தபரிபாலனய, பாலாய, மக்தாய, மஹாபலாய தனய திரவ்யாய தனேஸ்வராய மம ஸர்வாபீஷ்டம் பிரயஸ்ச. ஸ்வாஹா.

சுப்பிரமண்ய தேவதாயநமஃ.

இதின் பூரண விவரம் யாவும் 50-வது பக்கம் பார்க்கவும்.

உ

வேலுமயிலுந்துணை.

ஆறெழுத்தந்தாதி,

மூலமும் - விரிவுரையும்.

"ஆறு எழுத்து அந்தாதி" எனக் கொள்ளப்படுதலால், ஆறு எழுத்துகளின் சீர்த்திகளைக் கூறுகின்ற அந்தாதியாகிய நூல், என விரிந்து வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் நூற்குக் காரணக்குறியாயிற்று.

ஆறு எழுத்து என்பது, முருகற்குரிய எழுத்தாம்.

அந்தாதி: ஒரு செய்யுளின் அந்தத்தை (ஈற்றை) மற்றொருசெய்யுளின் ஆதியாக (முதலாக) வைத்து நூறுசெய்யுள்கள் பாடுவது.

அது கட்டளைக்கலித்துறையில் பாடுவதொன்றும், வெண்பாவாப் பாடுவதொன்றுமென இருவகைப்படும்.

கட்டளைக்கலித்துறையாய்ப் பாடுவதைக் 'கலித்துறை அந்தாதி' எனவும்; வெண்பாவாப் பாடுவதை 'வெண்பா அந்தாதி' எனவும் வழங்குவர்.

அவற்றுள் இவ்வந்தாதி, கட்டளைக்கலித்துறையாய்ப்பாடியது.

பாயிரம்.

காப்பு.

விநாயகர் வணக்கம்.

நேரிசை வெண்பா.

கற்பகமி ருக்கத்தன் கந்தமிகு நந்தவனப்
பொற்பகமி ருக்கப் பொதியைமுனி - நற்காகத்
தண்ணீரை யாதரித்த வைந்துகரன் காப்பாமெம்
மெண்ணீரையாறெழுத்திற்கே.

59773

(இ-ள்.) கற்பகம் - பொன்னுலகத்தில் கற்பகச்சோலையானது, இருக்க- இருக்கவும், (அதை இராக்ஷதர் தொந்தரவினால் விட்டுத்) தன்-(பூலோகத்தில் ஏற்படுத்தின) தன்னுடைய, கந்தம்மிகு - மணம்மிக்க, நந்தவனம்=பூந்தோட்டமும், அகம்-இம் மண்ணுலகிலும், பொற்பு இருக்க- வாடாமற் செழித்திருக்கும் பொருட்டு, பொதிகைமுனி-பொதியமலையி லெழுந்தருளின அகத்தியமுனிவருடைய, நல்—உயர்ந்த, காகத்து=குடத்தில், அண்-அடங்கியிருந்த,

நீரை-தண்ணீரால், ஆதரித்த-காப்பாற்றின, ஐந்துகரன்-ஐந்துகைகளையுடைய விநாயகக்கடவுள், எம்-எம்மாற் செய்யப்பட்ட, நீர்-நற்றன்மையுள்ள, ஐ-அழகிய, ஆறு எழுத்திற்கு—ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூற்குயாதோர் இடையூறும் அணுகாமல் நிறைவேறுதல் பொருட்டு, காப்பாம்=காத்துரக்ஷிப்பார் (என்றவாறு.)

இது மங்கலவாழ்த்துக் கூறியதாம். முதற்கண் மங்கலங்கூற வேண்டியது அவசியமே. என்னை? நூல் நிறைவேறுதற்கும் வழங்குதற்கும் உண்டாம் இடையூறுகள் அம்மங்கலத்தால் நாசமுறுதலின். இடையூறென்பது பாவம். பாவத்தினுல் நற்காரியங்கள் நிறைவேரு. ஆகையால் அப்பாவங்களைப் போக்கவல்ல மங்கலம் வேண்டும்.

ஆயின், நூல்செய்வோர் பாவமில்லாதவர்களானுலோ எனின், அவராலும் மங்கலஞ்செய்யத்தக்கதேயாம். இன்றேல் அந்நூலை நோக்குவோர்களெல்லாம் ஆசிரியரை நாஸ்திகரெனக் கொள்வராதலானும், அவர்களுக்கு அந்நூற்கண்மனவூக்கஞ் செல்லாதாகலானும் மாணுக்கரும் முட்டுப்பட்டு மயங்குவாராகலானு மென்க.

அங்ஙனஞ்செய்யும் மங்கலம், ஆசீர்வாதரூபமங்கலம் (வாழ்த்து)என்றும்; நமஸ்காரரூபமங்கலம் (வணக்கம்) என்றும், வஸ்து நிர்த்தேசரூப மங்கலம் (பொருளியல்புரைத்தல்) என்றும் மூவகைப்படும்.

இதனை;

முராரியாதிய தேவர்கள் முதலூறு
முழுதுல கினிலுள் ளோர்
விராவி யாதொரு காரிய மாயினும்
விளங்குறச் செயவென்றே
பராவி யுன்னருச்சனை புரிபவர் மனத்துறு
பான்மைதந் தருளுநன் னன்
பிராது செய்பவர் காரிய மூறுசெய்
திடுதி யென்றிவை சொன்னுன்'' என்பதாலறிக.

ஆகலின். இது எற்புடைக்கடவுளை வணங்கிய வணக்கமென்க, முருகனை வழிபடுவோர் விநாயகனை வழிபடாதிரார், ஆகலின் இது வழிபடுகடவுள் வணக்கமுமாகும்.

'நேரிசைவெண்பா' நான்கடியாய் இரண்டாமடி இறுதிச்சீர் தனிச் சொல்லாய்வா, அடிமுழுதும் ஒரெதுகையாகவேனும், முன்னிரண்டடி ஒரெதுகையும், பின்னிரண்டடி மற்றோரெதுகையுமாக வேனும் வரும்.

இவ்வெண்பா முன்னிரண்டடியும், பின்னிரண்டடியும் வெவ் வேறெதுகையாய்த் தனிச்சொற்பெற்றமையின் நேரிசைவெண்பா வாயிற்று:

இதனை;

"நாலோரடியாய்த் தனிச்சொற்பெற்றுடன்
ஈரொருவாய்முற் றிருவிகற்பொன்றினும்
நேரிசைவெண்பா வெனப்பெயராகும்" எனவரும் யாப்பருங்கலச்சூத்
திரத்தா லறிக.

'நற்கரகத்தண்ணீர்' என்பது 'கலபத்தேர்மாமிசை' என்னுங் கந்தானு பூதிப் பிரயோகம்போன்றது.

இதனுல் தேவேந்திரன் பொன்னுலகத்திருக்கும் கற்பகச்சோலையைவிட்டு மண்ணுலகிழிந்து ஈங்கோர் நந்தவனம் அமைத்தானெனவும், அது வாடியகாலத்தில் கொண்டுசென்ற பொதியமுனி காகத்தண்ணீரை அவ்விந்திரன் வேண்டுகோளால் விநாயகர் கவிழ்த்து அவ்வனமோங்கச் செய்தனர் எனவும் வெளியாகின்றது.

முருகர் வணக்கம்.

கட்டளைக்கலித்துறை.

ஆறு முகமுண்டு பன்னிரு தோளுமுண் டங்கையினி
லேறிய வேலுண்டு வெற்றிம யூரமுண் டேவல்செய்ய
மீறிய சிங்கத் துரைவீர வாகுண்டு வேளைக்கிங்கே
கூறிய போது வருவான் குமா குருபானே.

(இ-ள்.) ஆறுமுகம்உண்டு—ஆறுமுகங்கள் இருக்கின்றன, பன்னிருதோளும் உண்டு—பன்னிரண்டு தோள்களிருக்கின்றன, அகம் கையினில்-உள்ளங்கைகளில், ஏறிய-(பகைவருடலிற்) சென்ற, வேல்உண்டு-வேலாயுதம்இருக்கின்றது, வெற்றி—ஜெயமுள்ள, மயூரம்-மயில்வாகனம், உண்டு-இருக்கின்றது, ஏவல்செய்ய-இட்டவேலைகளைச்செய்ய, மீறிய—பலமுள்ள, சிங்கம்-சிங்கத்தையொத்த, துரை-உயர்ந்தவரான, வீரவாகுஉண்டு (வீரவாகுதேவ ரிருக்கிறார்,) (ஆகையால்) இங்கு-இவ்விடத்தில், வேளைக்கு - நாம் வேண்டிய வேளைக்கு, கூறியபோது—உள்ளன்போடு அழைக்கிற காலத்திலெல்லாம், குமான்-வாலிபனும், குருபான்-பரமேஸ்வானுக்குக்குருவுமானசுப்பிரமணியன், வருவான்-எழுந்தருளுவன். எ—று.

ஆன்மாக்கள் எக்காலத்தழைக்கினும் சென்றருள் சக்தியுள்ளவன் இவனே யென்பார், 'ஆறுமுகம் உண்டு' எனவும்;அடியார்கள் இடையூற்றை நீக்குபவ னென்பார், 'பன்னிருதோளுமுண்டு' எனவும்; பன்னிரண்டு கைகளிலும் தனித் தனி ஆயுதங்களிருப்பினும் அவற்றுள் வேலேசத்தி என்பார் 'அங்கையினில் ஏறிய வேலுண்டு' எனவும்; வேண்டிய இடங்கட்குவிரைந்து செல்லவும் கூடியவனென்பார், 'வெற்றிமயூரமுண்டு' எனவும்; நவவீரர்கள் துணைவரேனும் அவர்களிலிவன் வன்மையாளனென்று விளக்குவார், 'ஏவல்செய்ய மீறிய சிங்கத்துரை வீரவாகுண்டு' எனவும்; இவனுடைய சர்வவியாபகத்திற்குப் பின்னமென்னை யென்பார், 'வேளைக்கு இங்கே கூறியபோது வருவான்' என்றும்;

இவன் என்றும் இளைஞனாய்ப் பிறப்பிறப்பின்மைய னென்பார், 'குமரன்' எனவும்; இவனேபரமேச்சுரனுக்குக் குடிலைப்பொருளையுரைத்தவனென்பார்; 'குருபரன்' எனவுங்கூறினர்.

ஆறுமுகம் உண்டு என்பதற்கு ஆறுதலையுணர்த்தும் முகம் உண்டு எனவும்; பன்னிருதோளும் உண்டு என்பதற்குத்துதிசெய்தற்குரிய இரண்டு தோள்களும் உள எனவும் கூறுவாருமுளர்.

குமாரகுருபரனே எனவும் பாடம்.

ஆறுமுகம்; பன்மையிலொருமை வந்தவழுவமைதி.

இதனை,

"ஒருமையிற் பன்மையும் பன்மையிலொருமையும்
ஓரிடம் பிறவிடந்தழுவலு முளவே" என்பதனாலறிக.

'பன்னிருதோளும்' என்பதும் அவ்விதி கொண்டதேயாம். முகம் உண்டு என்பது எழுவாய்க்கேற்கவினை ஒருமைச்சொல்லாய்வரினும் பன்மைப் பொருளே பயந்தது.

"வேறில்லையுண்டைம்பான் மூவிடத்தன" என்பது சூத்திரமாகலின்.

அகம்—கை அங்கை இது, "அகமுனர்ச்செவிகை வரினிடையனகெடும்" என்னும் விதி கொண்டது.

கட்டளைக் கலித்துறை; முதற்சீர் நான்கும் வெண்டளையிற் பிறழாமலும், கடைச்சீர் ஒன்றும் விளங்காயாகியும் வருகின்ற ஐஞ்சீரடி நான்கு கொண்டுவரும்.

இதில் முதல் அசை நேரசையாயும் ஓரடிக்குப் புள்ளி எழுத்துத்தள்ளிப் பதினாறு எழுத்துள்ளதாகவுமிருப்பது நேரசைக்கட்டளைக் கலித்துறை எனவும்;

முதல் அசை நிரையசையாயும் ஓரடிக்குப் புள்ளிஎழுத்துத் தள்ளிப் பதினேழெழுத்துள்ளதாகவுமிருப்பது நிரையசைக் கட்டளைக்கலித்துறை எனவும் இது இருவகைப் படும்.

இதனை,

"முதற்சீர் நான்கும் வெண்டளைபிழையாக்
கடையொரு சீரும் விளங்காயாகி
நேர்பதினாறேநிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே."

என்னுஞ்சூத்திரத்தாலறிக.

ஆயின், இவ்வந்தாதி நேரசைக் கலித்துறையும், நிரையசைக் கலித்துறையும் விரவியநூலாம். எங்ஙனமெனின், முருகர்வணக்கத்துடன் அந்நூல் நூற்றுமூன்று கலித்துறையுள், அறுபத்து நான்கு செய்யுள்கள் நேரசைக்கலித்துறையாகவும், முப்பத்தொன்பது செய்யுள்கள் நிரையசைக் கலித்துறையாகவுமிருப்பதா லென்றறியக்கடவர்.

இவ்விருவகைக் கலித்துறைகளில் இச்செய்யுள் நேரிசைக் கலித்துறை யாகும். அதின் விதிகொண்டமை யினுல்.

ஆனந்தமாறெழுத்தாலயமாமெனதங்கமெல்லாந்
தானந்தமாதிமுதற்பொருளாகிச்சத்தாங்கமுநீ
மோனந்தமுன்னுளதென்னுளதுன்னுளதென்னுளதா
லீனந்தம்போக்கியெனைநீயதாக்கியவென்குருவே (1)

(இ—ள்.) ஆநந்தம்=பேரின்பத்தைவிளை விக்கின்ற, ஆறுஎழுத்து-சடாக்ஷரங்களுக்கு, ஆலயம் ஆம்-இருப்பிடமாக இருக்கின்ற, எனது அங்கம்-எல்லாம் என்னுடைய சரீர உறுப்புகளெல்லாமும், தான்=அப்பொருளாகியும், அந்தம் ஆதி=சங்காரத்தின்கண்ணே சிருஷ்டித்தொழிலைச் செய்கின்ற, முதற்பொருள் ஆகி=அநாதியாயுள்ள பொருளாய், சத்தாங்கமும் நீ=எல்லாம் நீயேயானுய், மோன அந்தம்=மௌன ஞானனந்த மாகப்பார்த்தால், உன்னுளது என்னுளது உன்னுளது என்னுளது-உன்னுடையது என்னுடையதாகின்றது, ஆல்= ஆகையால், (நான்பலவாருக எண்ணுகின்ற) ஈனம்தாம்=குறைபாட்டையெல்லாம், போக்கி-நீக்கி, என்னை= அடியேனை, நீயது ஆக்கிய-நீயேயாகச் (சிவமேயாகச்) செய்த என்குருவே=என்னுடைய ஞானசிரியனே. எ-று.

விடுதலைக்காலத்தில் எல்லாம் இறைவன்வயமாய் நிற்றலான், 'உன்னுளது என்னுளது' என இருபாலடுக்கிக் கூறி அநுவதித்தார். எல்லாம் இறைவன் வசப்படவே ஆன்மாவின்தொழில் வேருக ஒன்றிருப்பதாக நிகழவில்லையென்பார், 'எனது அங்கமெல்லாம் தானந்தமாகிமுதற்பொருளாகிச் சத்தாங்கமும் நீ' எனவும்; அங்ஙனம் சரீராதி அங்கங்களெல்லாம் நாதமயமாகின்றவென்பார், 'ஆனந்தம் ஆறெழுத்தாலயமாம் எனது அங்கமெல்லாம்' எனவுங் கூறினுர். இந்தக்கலித்துறை சுத்தபாடமாகக்காணப்படவில்லை. ஆனதால் உள்ளவாறு ஒருவாறுபொருத்திப் பொருளுரைத்தாம். சுத்தபாடமாகக் கிடைக்கப்பெற்றவர்கள் தெரிவித்தால் அதைக்கொண்டு இன்னும் விரிவாக எழுதத் தயாராயிருக்கின்ருேம். இவ்வாறே இந்நூலில் சிலவிடங்களில் வருமாறு காண்க.

என்குருவேக்ருபையாநந்தமோனமெழிற்சிவனுர்
தன்குருவேபரையீராறுகோலஞ்சமைந்தநமைப்
பின்குருவேவிந்துநாதம்பரம்பெரும்பேரொளிக்கு
முன்குருவேமுருகோனுறெழுத்தென்னுமூலங்களே. (2)

(இ—ள்.) என்குரு=என்னுடைய ஞானசிரியரும், கிருபை=பெருங்கருணைத்திறத்தையுடைய, ஆநந்தம்=பேரின்பத்தை விளைவிக்கின்ற, மோனம்= மௌனமான, எழில்=அழகையுடைய, சிவனுர்தன்குரு=சிவபெருமானுக்குக் குருவும்; பரை= உமாதேவியானவள், ஈர்=வகுத்த, ஆறுகோலம் சமைந்த=ஆறுதிருமுகத்தையுடைய, நம்ஐ=நம்முடையதலைவனும், விந்து=விந்துவக்கும், நாதம்=நாதத்துக்கும், பரம்=உயர்ந்த, பெரு, பெரிய, பேர் ஒளிக்கும்=தே

சோமயத்திற்கும், பின்குருமுன்-குருப்பின்னும் முன்னும் தலைமை பூண்டிருப்பதும், முருகோன்= ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளுடைய, ஆறெழுத்து என்னும்=சடாக்ஷரமென்றுசொல்லப்படும்,மூலங்களே=மூலமந்திரங்களேயாம்.எ-று.

சிவனார்தன்குருவானது: கயிலாசமலையில் ஒருகாலத்தில் தேவர்களெல்லாம் சூரபத்மனுதியரின் உபத்திரவத்தை முறையிடச்சென்றகாலத்தில் அங்கிருந்த ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் பிரமதேவனைநோக்கி நீயார்? என்று கேட்க, நான் பிரமதேவன் என்ன, அதற்கு உன்தொழிலென்ன? என்ன, எனது சிருஷ்டித்தொழில் என்ன? ஆனல் உனக்குவேதம் வருமா என்ன? வரும் எனப்பிரமன் கூற, ஆயின் அதைச்சொல் என்ன? பிரமதேவன் பிரணவத்தை முதலிற் சொல்லிவேதத்தைத்தொடங்குங்கால், ஸ்ரீசுப்பிரமணியர் அப்பிரணவத்திற்குப்பொருள் சொல்லும்படிகேட்க, பிரமதேவன் தெரியாதென்ன அவன்தலையில் குட்டி அவனைச்சிறையிலிட்டனர். அதைத்தேவர்களறிந்து சிவபெருமானிடம் முறையிட்டனர். அதுகேட்ட இறைவர் நந்தி எம்பெருமானை அனுப்பி பிரம தேவனை விட்டு விடும்படி சொல்லென்ன, அவரும் அவ்வாறே ஸ்ரீசுப்பிரமணியரிடத்திற் சென்று சொல்ல, அவர் மிகக் கோபங்கொள்ள, அகன்று நந்தி எம்பெருமான் சிவபெருமானிடம் நடந்த சங்கதிகளைச் சொல்ல, சிவபெருமானேசென்று விட்டுவிடும்படி சொல்லியும் கேளாமல் அவரையும் அதற்குப் பொருள்வினவ, அவர் நீ சொல் என்னத் தான் குருவாயிருந்து அப்பிரணவத்தின் பொருளைக்கூறினுரென்பது.

பரை ஆறுகோலஞ்செய்தது:—

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் சரவணப்பொய்கையில் ஆறுகுழந்தையாய் வளர்ந்திருந்தபொழுது, அக்குழந்தைகளை பரமேஸ்வரனும் பார்வதியும் எடுத்துக்கொண்டுவரச்சென்றபோது பரமசிவன் ஆறுகுழந்தைகளையும் வரிசையாகநிறுத்தி இடுப்பைச் சேர்த்துப்பிடித்தெடு என்று சொல்லியபடி பார்வதிசெய்ய ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளுங் கூடிய ஒரு குழந்தையாயினமை.

முருகன் ஆறெழுத்து, சரவணபவ என்று பெரும்பாலார் கையாடுகின்றனர். ஆயின், 'கல்லாடத்திற்குரையாசிரியர் மயிலேறும் பெருமாள் பிள்ளை என்பவர்' "குமாராயநம" என்றார் தம்முரையில். (2)

மூலங்களேசிவஞ்சத்திவித்தாயுன்னுமுன்பிறந்த
சீலங்களேபஞ்சகர்த்தாவுநின்வழித்தேறியொரு
காலங்களேயொக்கவேகக்கருப்பக்கடையினின்ற
கோலங்களேமுருகோனறெழுத்தின்குணக்குன்றமே. (3)

(இ-ள்.) முருகோன்-ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளே, நின்=உன்னுடைய, ஆறெழுத்தின்=சடாக்ஷரத்தின், குணக்குன்றம்=குணமென்னும் மலையானது, சிவம்=சிவமாகவும், சத்தி=சத்தியாகவும், வித்து=அவற்றிற்குக்காரணமாகவும், உன்னும்=நினைக்கின்ற, மூலங்கள்-மூலாதாரப்பொருளும், முன்பிறந்த சீலங்கள்=எவற்றிற்குங்காரணமான நிர்மலப்பொருளும், பஞ்சகர்த்தாவும்=பஞ்சகர்

த்தர்களும், நின்வழிதேறி=உன்முகாந்தரமாக வன்மைபெற்று, ஒருகாலங்கள்-எந்தக்காலத்திலாவது,ஒக்க =ஏக-எல்லாப்பொருளும் அடங்குஞ்சர்வசங்கார காலமாயின், கருப்பக்கடையின் நின்றகோலங்கள்=கருவின் அந்தத்தின்கண் நின்ற அழகிய ரூபமுள்ளவைகளுமாம். (எனவே) வீட்டை அடைவிப்பதாய் அழியாமலிருப்பனவாம். (எ-று.)

'திருவள்ளுவ நாயனுர் குறளுக்கு நற்பொருள் கண்ட உரையாசிரியர் பரிமேலழகர் நாதமாத்திரையான இயல்பாய்ப் பிறத்தலினுனும்' எனவரைந் தாற்போல்; நாதமே எவ்லாவற்றிற்குங் காரணமாதலானும்·அங்கிருந்தே சர்வதோற்றங்களும் உண்டாவனவாகலானும், மீண்டும் ஒடுங்கும்போதும் அங்ஙனமேயாதலானும், 'ஆறெழுத்தின்குணக்குன்றம் கருப்பக்கடையினின்ற கோலங்கள்' என்ருர். (3)

குணக்குன்றமேயன்பருள்ளூடுருவிக்குமுகுமென
மணக்குன்றமேமுருகாவென்றன்கன்மத்தைமாற்றிடுங்கங்
கணக்குன்றமேயெங்குமாறெழுத்தாயுருக்காட்டியபொற்
சுணக்குன்றமேயண்டபிண்டமொன்ருய்நின்றசூத்திரமே. (4)

(இ-ள்) குணம் குன்றமே=உயர்ந்த குணமாகியமலையே, அன்பர் உள்=அடியார்களுடையமனத்திலே, ஊடுஉருவி=நெருங்கிச்சென்று, குமுகுமுஎன மணக்குன்றமே=மிகவும் மணக்கின்ற குன்றமே, முருகா=என்றும் இளைஞனே, என்றன்=என்னுடைய, கன்மத்தை=கர்மங்களையெல்லாம், மாற்றிடும்=நீக்குதற்கு, கங்கணம் குன்றமே= காப்புக்கட்டிக் கொண்டிருக்கின்ற ஞானபர்வதமே, எங்கும்=பார்க்கிற இடங்களிலெல்லாம், ஆறுஎழுத்தாய் உருகாட்டிய-சடாக்ஷரமாகவேதெரிசனங்கொடுத்தருளிய, பொன்சுண்ணக்குன்றமே-பொன்போலுந்திருநீற்று மலையாயுள்ளவனே, அண்டம்பிண்டம் ஒன்ருய் நின்ற சூத்திரமே-உள்ளும் வெளியும் ஒன்ருகவிருக்கின்ற சூத்திரதாரியே. (எ-று.)

இப்படிப்பட்ட நீ என்னை ஆண்டுரக்ஷிக்கவேண்டும் என்பது குறிப்பெச்சம்.

குணக்குன்றத்தின் மகிமையை,

"குணமென்னுங்குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்தலரிது." என்பதினுலறிக.

அன்பருள்ளத்தின் கண் மணத்தலை,

"தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகைதனக்கு முண்டோ
தமியனேற் கிவ்வணந் திருவுள மிரங்காத
தன்மையாற் றனியிருந்து
துன்பமுறினெங்ஙனேயழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்கு முரையாய்" என்பதாலறிக.

முருகன் ஆன்மாக்களைக்காத்தற் பொருட்டே வந்தவனென்பார், 'என்ற ன்கன்மத்தை மாற்றிடுங்கங்கணக்குன்றமே' என்றார். இதனை, (4)

"காக்கக் கடவிய நீ காவாதிருந்தக்கால்
ஆர்க்குப்பரமாமறுமுகவா" என்பதினாலறிக.

திரமேமுருகநின்னாறெழுத்தங்கிதஞ்சிந்தைபற்றிப்
பரமேயிதென்றுள்ளுணர்ந்தோர்க்குமன்பர்பழவினைநிட்
டுரமேசிதையும்பிறப்பறுங்கூற்றுமொழியுநில
வரமேயெக்காலமுஞ்சாவார்சிவசித்தர்மானிலத்தே. (5)

(இ-ள்) முருக=சுப்பிரமணியனே, நின் ஆறுஎழுத்து அங்கி=உன்னுடையசடாக்ஷரமாகிய நெருப்பை, திரம்=பலமாக, தம் சிந்தை=தம் முடையமனத்தின்கண், பற்றி=பலமாய்ப்பிடித்து, இதுவேபரம்=இதுவே மேலானபதத்தைக்கொடுப்பதென்று, உள்=தங்கள்மனத்தில், உணர்ந்தோர்க்கும்=நன்றாய்த்தெரிந்துகொண்டவர்களுக்கும், அன்பர்-அன்பர்க்கும், பழவினை=பூர்வவினையை, நிட்டுரமே சிதையும்=கோபித்துக்கெடுக்கும், பிறப்பு அறும்= அதனால் பிறப்புண்டாகமாட்டாது, கூற்றும் ஒழியும்=சாவுமுண்டாகமாட்டாது, எக்காலமும் நிலவரமே=எப்பொழுதும் ஒருபடித்தாயிருத்தல்கைகூடும்,(அவர்களே) மாநிலத்து=இவ்வுலகத்தில், சாவாசிவசித்தர்=அழியாத சிவசித்தர்களாவார்கள்.(எ-று)

சடாக்ஷரமானது அங்கிமயமென்றார், இறைவன் சுப்பிரமணியன் நெற்றிவிழிக் கனலின்தோன்றினவனாகலின். இதனை;

"உம்பாசுரேசர்புரிவாதனையுரைத்தருள
யுயர்கயிலைவாழ்பரமனார்
யோகத்திலுன்னவெண்ணீறணியுநுதல்விழியி
லோராறுபொறிகள்சிதற
வெம்பொறியெழுந்தண்டரண்டம்பரந்துலவ
விண்ணவர்களஞ்சிமலைவாழ்
வித்தகர்க்கோதவப் பொறிகடமைவாவென்று
வெங்கனலிதனையிதனைநீ
சம்ப்ரமொடு சரவணந்தனில்விடுதியென்னவத்
தழலவன்கொண்டகலவத்
தழல்வெம்மையாற் கங்கைதனில்விடக் கங்கையுஞ்
சரவணந்தனில் வைத்திடச்
செம்பதுமமுகமாறுடன் குலவுகாணூர
செங்கீரையாடியருளே
திருமுருகவரிமருக வாதகுரு பாகுமர
செங்கீரையாடியருளே" என்பதாலறிக.

நிலத்தேயிறப்பும்பிறப்புமருக்கன்மநீங்குமிப்பூ
தலத்தேமிதக்கினுமேமுருகாவென்றுன்னுறெழுத்தைப்
பிலத்தேபிடித்தவர்க்கப்பானின்னுநந்தப்பேறொளிரச்
சலத்தேமிதப்பரல்லாற்பின்னைவேறுந்தடையிலையே.

(இ-ள்,) இ பூதலத்து-இவ்வுலகத்தில், மிதக்கினும்-கிடந்தாலும், முருகா என்று-முருகாஎன்று வாழ்த்துவதுடன், உன் ஆறு எழுத்தை-உன்னுடைய ஆறெழுத்துகளை, பிலத்தே-பலமாக, பிடித்தவர்க்கு-கைப்பற்றினவர்களுக்கு, அப்பால்-(அதைக்கைப்பற்றின) பிறகு, நின்-உன்னுடைய, ஆநந்தப்பேறு-பேரின்பலாபமானது, ஒளிர்-விளங்குகின்ற, அசலத்தே-அந்தப் (பேரின்ப) வெள்ளத்தில், மிதப்பர் அல்லால்-மிதந்து அதன் வயமாயிருப்பார்களேயல்லாமல், பின்னை-பிறகு, வேறுந்தடையில்லை-வேறுதடைகிடையாது, (ஆகையால்) அவர்களுக்கு, நிலத்து-இந்நிலவுலகத்தில், அரு இறப்புபிறப்பு கன்மம் நீங்கும் ஒழியாததாகிய இறத்தலும் சாதலு மாகியவற்றைச்செய்யும் கர்மமானது நீங்கிப்போம். (எ-று.)

முருகன் சடாக்ஷர சிந்தனையால் பிறவிக்கேதுவான கர்மமலம்நீங்குகையின் 'நிலத்தே இறப்பும் பிறப்புமருக்கன்மநீங்கும்' எனவும்; அவர்கள் முருகன் வயப்பட்டு, தமக்கென்ன ஒருதொழிலிலராகலான், 'நின் ஆநந்தப் பேறு ஒளிர் அச்சலத்தே மிதப்பரல்லால் பின்னைவேறுந்தடையில்லை' எனவும் கூறினர்.

ஏகாரங்கள் அசைகள். (6)

தடையாதுபாசத்துருகாதுமாயைச்சாமறுகி
லுடையாதுகாயமுலையாதுள்ளாவியுலகிலினிப்
படையாதயன்கைப்பவநீக்கிஞானப்பரத்துறைவா
ழடையாவெங்கெங்குஞ்சிவமாகக்காட்டுநின்னுறெழுத்தே.

(இ-ள்.) நின் ஆறுஎழுத்து-உன்னுடைய ஆறெழுத்தானது, (அதைச்சிந்திக்கின்றவர்களுக்கு) தடையாது-யாதோர் இடையூற்றையுஞ் செய்யாது, பாசத்து உருகாது ஆணவத்தில் மனத்தைச் செல்லவிடாது, மாயைசாரம்மறுகில் உடையாது - மாயையாகிய பாணத்தின் மயக்கத்தால் மனம் தோல்வியடையாது, காயம்உலையாது-சரீரங் கெடுவியாது, உள்ஆவி உலையாது-உள்ளிருக்கின்ற உயிரைக் கெடுக்காது, உலகில் - இவ்வுலகத்தில், இனி அயன் கை படையாது - இனி பிரமனின் கையை படைக்கவிடமாட்டாது, பவம் நீக்கி-ஜென்மத்தைநீக்கி, பரஞானம் துறை - மேலான ஞானவழியில், வாழ் அடையா - வாழ்க்கையை அடைவித்து, எங்கெங்கும் - எவ்விடத்தும், சிவம் ஆகக் காட்டும்-சிவமேயாகக் காண்பிக்கும். (எ-று.)

உருகாது என்பது பிறவினைப்பொருட்டு, அடையா என்பதும் அப்பொருட்டே.

முருகனுடைய ஆறெழுத்தின்பெரிய சீர்த்தியைக் கூறியவாறும். (7)

ஆறெழுத்துண்மையறியார்கள்கன்மமறுக்கவப்பால்
வேறெழுத்தில்லைவெண்ணீறில்லைமால்சிவவேடமில்லை
தேறெழுத்தேதயன்கையுங்கருக்குழிச்சேரலும்பின்
மாறெழுத்தந்தகன்றென்புலத்தேயென்றும்வெளவுவதே.

(இ-ள்.) ஆறெழுத்து உண்மை அறியார்கள்-சடாக்ஷரத்தினது உண்மை மகிமையை யுணராதவர்களுடைய, கன்மம்-கர்மத்தை, அறுக்க - ஒழிக்க, அப்பால்-அவ்வாறெழுத்தைத்தவிர, வேறு எழுத்து இல்லை - வேறுமந்திராக்ஷரங்கள் இல்லை, வெள்நீறு இல்லை-திருநீறில்லை, மால்வேடம் சிவவேடம் இல்லை-விஷ்ணுவேடமும், சிவவேடமும் இல்லை, தேறு எழுத்து எது-தேறின எழுத்து எது வென்னில்,அயன்கையும் பிரமதேவன் கையெழுத்தும், கருகுழி சேரலும்-பிறவிக்குழியில் விழுவதும், பின்-பிறகு, மாறு எழுத்து - எதிர் எழுத்தாய், அந்தகன் - எமனுனவன், என்றும் தென்புலத்து வெளவுவது-எக்காலத்தாயினும் தென்புலத்தின் வெளவிச் செல்வதேயாம். (எ-று.)

ஆறெழுத்தினுண்மையை, உரைப்போனல் உள்ளபடி உணர்ந்தால் கன்ம முதலியவற்றை ஒழித்தற்காம் என்பார், 'ஆறெழுத்துண்மை யறியார்கள்' என எதிர் மறை முகத்தாற் கூறினர், அவ்வெழுத்துண்மையுணர வேண்டுமென்று வலியுறுத்தற்கென்க. (8)

வவ்வுநின்றாட்கன்பிலாதேநரகத்தைவெளவும்வஞ்சர்க்
கெவ்வழிமோக்கத்திற்கேதுவென்றாலெழுத்தாறுளநின்
சவ்வுரவ்வவ்வுணவ்பவ்வுவவ்வக்கரந்தன்னிலொன்றைக்
கவ்வுவர்கவ்வுவர்சொற்பிறந்தாற்றிரங்காட்டுமதே.

(இ-ள்.) வவ்வும்-இறுகப் பிடிக்கவேண்டிய, நின்தாளுக்கு-உன்னுடைய திருவடிகளுக்கு, அன்பு இல்லாது-அன்பு செலுத்துவதை விட்டு, நரகத்தை வவ்வும் வஞ்சர்க்கு - நரகத்தை விரும்பும் வஞ்சகர்க்கு, மோக்கத்திற்கு எது எவழி என்றால்-மோக்ஷமடைவதற்கு வழியாகவிருப்பது எது வென்றால், நின் எழுத்து ஆறுள-உன்னுடைய ஆறெழுத்துகளாக உள்ளனவான, சவ்வு ரவ் வவ்வுணவ் பவ்வுவவ்-சரவணபவ என்னும், சவ், ரவ், வவ், ணவ், பவ், வவ், என்று சொல்லப்படுகின்ற, அக்கரம் தன்னில்-எழுத்துகளில், ஒன்றை-ஒரு எழுத்தை, கெள்வவர் கெளவுவர்-நன்றாய்ப்பற்றி நினைக்கின்ற, சொல் - ஒலியானது, பிறந்தால்-விதிப்படி உண்டானல், அதேதிரங்காட்டும்-அவ்வெழுத்தே அம்மோக்ஷத்தைக் காட்டும். (எ-று.)

மோக்ஷத்திற்கேது முருகன் சடாக்ஷரம் ஓதுதலென்பார், சவ்வுரவ் வவ்வுணவ் பவ்வு வவ்வக்கரந் தன்னிலொன்றைக் கெளவுவர்கெளவுவர் சொற் பிறந்தாற்றிரங்காட்டுமதே' எனக்கூறினர்.

காட்டுமதே என்பது குற்றுகரவிதிகொண்டது 'முற்று மற்றொரோவழி' என்றமையின். (9)

கதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேவச்ரகாயந்தரும்
நிதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேயுண்ணிரப்புமருண்
மதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேயென்னுள்வைத்தபொற்றாட்
டுதிகாட்டுமேகுகநின்னுறெழுத்துள்ளசூத்திரமே.

(இ-ள்.) ஓர் எழுத்து-ஒரு எழுத்து, கதிகாட்டும்-மோக்ஷத்தைக் காட்டும், ஓர்எழுத்து-ஒரு எழுத்து, வச்சிரகாயந்தரும்-வஜ்ஜிர சரீரத்தைக் கொடுக்கும், ஓர் எழுத்து-ஒரு எழுத்து, நிதிகாட்டும்—செல்வங்கொடுக்கும், ஓர் எழுத்து-ஒரு எழுத்து, உள்நிரப்பும்-உள்ளே நிறைக்கின்ற, அருள் மதி காட்டும்-திருவருளறிவையுண்டாக்கும், ஓர்எழுத்து-ஒரு எழுத்து, என்னுள்வைத்த-என்னறிவின் கண்வைத்திருக்கின்ற, பொன்தாள் துதிகாட்டும்-அழகியபொன் போலுந் திருவடிகளின் வணக்கத்தைக் கொடுக்கும், குக-முருகனே, நின்-உன்னுடைய, ஆறுஎழுத்து ஆறுஎழுத்துகளில், உள்ள—இருக்கின்ற, சூத்திரம்-சூத்திரங்களாம் (எ-று.)

இது ஆறெழுத்துகளின் மகிமையை யுரைத்தவாறும். எழுத்துகளுக்கு இயற்கையிலேயே பெருமையுண்டென்பது தெற்றென விளங்குகின்றது.)

சூத்திரநம்முடற்சக்கரமேருவைச்சுற்றியரை
மாத்திரையிற்சந்த்ரசூரியர்போல்வரும்வாசிதனைக்
காத்திரவாய்மட்டியோகத்திருந்துங்கருமவுனச்
சாத்திரங்கைவருநின்னுறெழுத்துந்தரிநெஞ்சர்க்கே.

(இ-ள்.) நம் உடல் சக்கரம்- நம்முடைய உடம்பாகிய சக்கரம் போல்வதான, மேருவை-மேருமலையை, சுற்றி - வலப்புரமாகச்சுற்றி, அரைமாத்திரையில்-அரைநொடிப்பொழுதில், சந்திரசூரியர் போல்-சந்திரனும், சூரியனும் மேருமலையைச் சுற்றி வருவதுபோல், வரும்-சுற்றிவருகின்ற, வாசிதனை-காற்றை, காத்து-அடக்கி, இரவாய்-இரவும்பகலுமாய், மட்டு-கும்பித்து, யோகத்திருந்தும்-யோகஞ்செய்தும், கரு—பிறவிவேர் அறுப்பதற்குக்காரணமான, சூத்திரம்-வழியான, நின்ஆறு எழுத்தும்-உன்னுடைய மந்திரமாகிய ஆறு எழுத்துகளும், தரி-என்றும் மாறுமல் நிலைத்திருக்கின்ற, நெஞ்சர்க்கு-மனமுடையவர்களுக்கு, மவுனசாத்திரம் கைவரும்-மவுனமாயிருக்கும் நூல்வழியானது கைகூடும். (எ-று.)

எனவே, யோகஞ் செய்வோர்க்கும் ஆறெழுத்துகை கூடினன்றி மௌனம் சாதிக்கற்பால தன்றென விளக்கியவாறும்.

சந்திர சூரியர்கள் மேருமலையை வலப்பிரதக்ஷணஞ் செய்வதுபோல உடற் சக்கரத்தை வாசி சுற்றுகிறதென்பார், அங்ஙனங்கூறினர். அன்றியும் அவ்வாசியைச் சூரியகலை எனவும், சந்திரகலை யெனவும், சுழிமுனை எனவும் கூறுவது யோகநூலார் வழக்காதலின் அங்ஙனம் உவமித்ததூஉமாம்.

நெஞ்சேபொற்பீடநந்தேகஞ்சிவாலயநீள்பொறிக
ளஞ்சேயிவைபெறுமாதரஞ்சத்தியருணிலைவிட்
டுஞ்சாதுணர்வுமுருகன்றனாறெழுத்துன்னுவர்க்கும்
செஞ்சேவலன்றனக்குஞ்சரீரமுஞ்சித்துமொன்றே.

(இ-ள்.) நெஞ்சே-மனமே, பொற்பீடம்-பொன்னாற்செய்யப்பட்ட பீடமாகவும், நம்தேகம்-நம்முடையவுடல், சிவாலயம்-சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கோவிலாகவும், நீள்பொறிகள் அஞ்சே-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும், இவைபெறும் ஆதரம்-இவற்றைப் பெற்றிருக்கின்ற விருப்பமாகவும், சத்தி-சிவசத்தி, அருள்நிலை-திருவருள் நிலயமாகவும் விட்டு-கொள்ளவேண்டுவதைவிட்டு, உஞ்சாது-பிழைக்கவழியில்லாமல், உணர்வு-மேலான உணர்ச்சியைக்கொடுக்கின்ற, முருகன்தன் ஆறெழுத்து-முருகனது பீஜாக்கரமான ஆறெழுத்துகளையும், உன்னுவர்க்கும்-சிந்திக்கின்றவர்களுக்கும், செஞ்சேவலன் தனக்கும்-சிவந்தசேவற் கொடியை யுடையவனை முருகனுக்கும், சரீரமும் சித்தும் ஒன்றே-பேதமில்லாமல் உடலும் உயிரும் போல் ஒன்றாயிருத்தலாகும். (எ-று.)

உடலைச் சிவலிங்கம்போல்வதெனக்கூறுவர் முன்னோர். அவ்வாறே இவர் சிவாலயமென்றார், இதுவும் ஒருவாறு அப்பொருளதேயாம். ஆன்மாக்களுக்குத் திருவருள்செய்வது சத்தியாகலின், அச்சிவ சத்தியை, 'அருள்நிலை' என்றார்.

இதனைத், "தாயுடன் சென்று தாதையைக்கூடிப்பின் தாயைமறந், தேயுமதேநிட்டையென்றானெழிற் கச்சி யேகம்பனே." என்றதாலறிக. (12)

ஒன்றேமுருகநின்னாறெழுத்தோசையுலகமெல்லா
நின்றேபலபொருணீயென்றுநானென்றுநீதிவெவ்வே
றன்றேசமயங்களோராறுமாய்நின்றவாநந்தநீ
யென்றேதெளிந்தவர்க்கேகன்மமாயையிருளறுமே.

(இ-ள்.) முருக-முருகக்கடவுளே, நின்-உன்னுடைய, ஆறுஎழுத்து ஓசை-சடாக்ஷரத்தின் ஒலியால், உலகமெல்லாம் நின்று-சர்வலோகங்களிலு மிருந்து, பலபொருள்-பலவகையான பொருள்களிலும் நிறைந்திருப்பவன், நீயென்றும்-நீயே யென்றும், வெவ்வேறு நீதி நான் என்றும்-உனக்குவேறாக நானன உயிர்பலவகைப் பட்டதென்றும், அன்றே—முன்னாளிலிருந்தே, சமயங்கள் ஒரு ஆறும் ஆய் நின்ற ஆநந்தன்-ஆறுசமயங்களுமாய் நின்றபேரின்பமுடையோன், நீயென்றே - நீயேயாவாயென்று, தெளிந்தவர்க்கே-தெரிந்த ஞானிகளுக்கே, கன்மம் மாயை இருள் அறும்-கர்மமலம், மாயாமலம், ஆணவமலம் ஆகிய மூன்றும் நீங்கும். (எ-று.)

எனவே முருகக்கடவுளது ஆறெழுத்துகளே ஆறுசமயங்களாயும், பல பொருள்களாயும் விளங்குகின்றன என்றதாயிற்று.

இவ்வாறே ஸ்ரீ சிதம்பரசுவாமிகளுந்தமது சந்நிதிமுறையில், முருகனது ஆறுதிருமுகங்களும் ஆறுசமயக்கடவுளும் தானே என விளக்குதற்கறிகுறியெனக் கூறினர்.

இதனை;

"ஆறுசமயக்கடவுள் வேறு வேறின்றியாளொருவனேயங்கங்கிருந் தன்பர்க்கு முத்திதருவித்தென்றியாவர்க்கு மறிவித்த வதனமணியே" என்பதாலறிக.

ஆறுசமயங்கள் நால்வகைப்படும்: அவை, அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என. (13)

இருளறுமெங்குமொளியாய்நிரம்புமிரவுபகன்
மருளறுமாயுளும்விர்த்திக்குங்கர்த்தன்மட்டற்றுயர்ந்த
பொருளறுகோணத்தினுள்ளேயரியபொறியுளநின்
றருளருணாசலவேலவுனதெழுத்தாறுன்னவே.

(இ-ள்.) கர்த்தன்–பரமனுடைய, மட்டற்று உயர்ந்த–அளவுகடந்து உயர்ந்ததாகிய, பொருள்-உண்மைப்பொருளான, அறுகோணத்தின் உள்ளே-அறுகோணச்சக்கரத்திற்குள், அரிய-அருமையான பொருளை, பொறி உளம் நின்று-ஐம்பொறியின்வயப்பட்ட மனத்தின்கண்நின்று, அருள்-கிருபை செய்வாய், அருணாசல வேல-அருணாசலன் ஈன்ற வேலாயுதனே, உனது எழுத்து ஆறு உன்ன-உன்னுடைய எழுத்தான ஆறைத்தியானித்தால், இருள் அறும்–அஞ்ஞானம் நீங்கும், எங்கும் ஒளியாய் நிரம்பும்-எவ்விடத்தும் ஞான மயமாய் நிறையும், இரவுபகல் மருள் அறும்– அசோராத்திரம் மாய்கை நீங்கும், ஆயுளும் விர்த்திக்கும்-ஆயுள்பெருகும். (எ-று.)

ஆறெழுத்தின் மகிமையால் எல்லாம் கைகூடும் என்பதாம். (14)

உன்னரிதாமுருகோனாறெழுத்தினையுச்சரித்தாற்
கென்னரிதாம்பொருளொன்றிலையேயிறப்பும்பிறப்பும்
பின்னரிதாமிவையேதென்றுபேசிற்பிரமனிடந்
தன்னதிகாரமுந்தப்பியப்பானின்றதானவனே

(இ-ள்.) உன்ன அரிது ஆம்-நினைப்பதற்கரிதாகிய, முருகோன்-முருகனுடைய, ஆறு எழுத்தினை-ஆறுஎழுத்துகளையும், உச்சரித்தாற்கு-துதிசெய்தவனுக்கு, அரிது ஆம்பொருள் என்ன - அருமையான பொருள் என்ன இருக்கிறது, ஒன்று இலை-எதுவுமில்லை, பின் இறப்பும் பிறப்பும் அரிது ஆம்-பிறகு பிறப் பிறப்புகள் உண்டாகமாட்டா, இவை ஏது என்று பேசின்-இதற்குக்காரணம் என்னவென்று யோசித்துப்பேசுவோமானல், பிரமனிடம்-(அவ்வாறெழுத்துகளின் மகிமையால்,) பிரமதேவனிடத்தில் உள்ள, தன் அதிகாரமுந்தப்பி–தன்னுடைய அதிகாரத்தையுந் தப்பி, அப்பால் நின்ற-அப்புறமிருந்த, தானவனே-தான் அவனாகும் தன்மையுடையவனுவான். (எ-று.)

ஆறெழுத்தானது இப்படிப்பட்ட மகிமையுடையதென்று உணர்வது யாவர்க்கும் எளிதன்றென்பார், 'உன்ன அரிதாம்' என்றும், அதை உச்சரித்தவர்க்கு எதுவும் எளிதென்பார், 'என்னரிதாம் பொருள் ஒன்றிலையே' எனவும், கூறினர்.

அரிது என்பது இல்லை என்னும் பொருட்டு. (15)

தானவனாதிவிநாயகனான்முகன்சங்குசக்ர
வானவன்ருத்ரன்மகேஸ்வரனீசன்வடிவிவையே
யானவனாறுமுகத்தன்பரசமயத்தன்முரு
கோனவனின்னெழுத்தாறேபொருளெனக்கொண்டனனே.

(இ-ள்.) தானவன்-அப்பரம்பொருளானவன், ஆதிவிநாயகன் - முதல்வனான விநாயகனும், நான்முகன்-பிரமதேவனும், சங்குசக்கரவானவன் - சங்கையும் சக்கரத்தையுமுடைய விஷ்ணுவும், ருத்ரன் - உருத்திரமூர்த்தியும், மஹேஸ்வரன்-மகேசனும், ஈசன்-சதாசிவனும் ஆகிய இவர்களுடைய, வடிவு-ரூபங்களான, இவையே-இவைகளே, ஆறுமுகத்தன் ஆனவன்-ஆறுமுகமாகக் கொண்டவன், பரசமயத்தன்-சர்வமதங்களிலும் தானே கடவுளாயுள்ளவன், முருகோன்-முருகன், அவன்-அவனுடைய, ஆறுஎழுத்தே — சடாட்சரங்களையே, பொருள் எனக்கொண்டனன்-உண்மைப்பொருளென்று உணர்ந்தேன். (எ-று.)

ஆறுமுகன், முற்சொன்னதெய்வங்களாறுவர்கள் வடிவனென்பார் இங்ஙனங் கூறினர். இதனை;

> "வாரணமுகவன் மலரோன்றிருமால்
> வருத்தமிலுருத்திரன் மகேச்சுரன்சதாசிவ
> னுருத்தெளிந்திடநம் முருவேயாகும்
> ஆறுமாமுகத்தமர்ந்தது மிதுவே" என்பதா லறிக. (17)

கொண்டனைகையிற்பொறைவேலன்பின்புறுகொக்கிரண்டாய்க்
கண்டனைமஞ்ஞையுஞ்சேவலுமாய்வரக்காரணத்திற்
பண்டனையாதிபகவனிப்போதவன்பாலனென
விண்டனையாறெழுத்தாய்முகமாறுடன்மேவியதே.

(இ-ள்.) ஆறுஎழுத்தாய்-சரவணபவ என்னும் சடாக்ஷரமாயும்,முகம் ஆறுடன்-ஆறுமுகங்களோடும், மேவிய-வெளிப்பட்டுவந்ததே, முருகக்கடவுளே! கையில் பொறைவேல் கொண்டனை-கையில் திருவருளையுடைய வேலாயுதத்தைக்கொண்டாய், அன்பு இன்பு உறு-அன்பையும், இன்பத்தையும் பெற்ற, கொக்கு-சூரனாகிய மாமரத்தை, இரண்டாய் கண்டனை-இரண்டு கூறாகப்பிளந்தாய், (அவ்விரண்டு கூறும்) மஞ்ஞையும் சேவலும் ஆய்வர-மயிலும் சேவலுமாய் வடிவங்கொண்டுவர, கண்டனை காரணத்தின்-முன்காரணத்தைக்கொண்டு அவைகளை கொடியும் வாகனமுமாகக்கொண்டாய், இப்போது ஆதிபகவன்

பாலன் என விண்டனை பார்வதிபரமேஸ்வரர் களுக்குக் குழந்தையாகவெளிப் பட்டாய். (எ-று.)

கொக்கு, பலபொருளொருசொல். அது ஈண்டு மாமரத்தை உணர்த் திற்று.

"கொக்குமாமரமே செந்நாய்
குரண்டமேகுதிரைமூலம்" என்பதா லறிக.

சூரன் முருகவேளோடு பொரவேலாமையின் கடலிடஞ் சென்று மாமர மாயிருந்தமையையுணர்ந்து முருகவேள் தமது வேலால் அம்மரத்தை இரு கூறாக்கினர், அக்கூறுகளே மயிலுஞ் சேவலு மாயின என்பது காந்த புராண வரலாறு.

இதனை;

"பாய்திரையுடுத்தஞாலமுடிவென்ன
முடங்குளைமுகத்துப்பஃறேளவுணனொடு
மிடையுடுவுதிரச்செங்களம்பொருது
ஞாட்பினுண்மறைந்து நடுவறவாத்தால்
வடவைநெடுநாக்கின்கிளைகள்விரிந்தென்னச்
செந்துகிர்படருந்திரைக்கடற்புக்குக்
கிட ்தெரிவடவையிற்றளிர்முகமீன்று
திரைபெறிமலைகளிற்கவடுபலபோக்கிக்
கற்செறிபாசியிற் சினைக்குழைபொதுளி
யகறிரைப்பரப்பிற்சடையலைந்தலையாது
கீழிணர்நின்றமேற்பகைமாவி
னேருடலிரண்டுகூறுபடவிடுத்த
வழியாப்போளியுமைக்கணின்று
தற்பெயர்புணர்த்திக்கற்பினொடுகொடுத்த
அமையாவென்றியாத்தநெடுவேலோய்
கீழ்மேனின்றவக்கொடுந்தொழிற்கொக்கின்
கூறிரண்டாயவொருபங்கெழுந்து
மாயாப்பெருவரத்தொருமயிலாகிப்
புடவிவைத்தாற்றியபஃறலைப்பாந்தள்
மண்சிறகவிரித்தமணிப்படந்தூக்கி
விழுங்கியபல்கதிர்வாய்தொறுமுமிழ்ந்தென
மணிநிரைசிந்திமண்புகவலைப்பக்
கார்விரிந்தோங்கியமலைத்தலைக்கதிரென
வோவறப்போகியசிறைவிரிமுதுகிற்
புவனங்காணப்புகழொடுபொலிந்தோய்
போழ்படக்கிடந்தவொருபங்கெழுந்து
மின்னன்மாண்டகவிரலர்பூத்த
சென்னிவாரணக்கொடும்பகையாகித்

தேவர்மெய்பணிப்புறவான்மிடையுடுத்திரள்
பொரியிற்கொறிப்பப்புரிந்தபொருணடித்
தாமரைபழித்தகைமருங்கமைத்தோய்'' எனக்கல்லாடத்திலறிக. (17)

மேவியவாதிசிவாயசதாசிவவேலைதனி
லாவியநம்பெருமான்முருகாவென்றுன்னாறெழுத்தே
தாவியவுள்ளமதாகவெண்ணீற்றைத்தரித்துனையே
கூவியபேர்கண்முன்னஞ்சலென்றேவந்துகூடுவையே.

(இ-ள்.) மேவிய ஆதி-முதற்பொருளாயுள்ளவனே! சிவாய-நமச்சிவாய என்னும் பஞ்சாக்ஷரவடிவமானவனே! சதாசிவ-சதாசிவரூபனே! வேலைதனில் ஆவிய-ஆபத்துக்காலத்தில் உயிர்போல் உதவுவோனே! நம்பெருமான்-நம்முடைய பெருமையையுடையானே! முருகா - இளம் பிராயமுள்ளவனே! என்று-என்று சிந்தித்து, உன் ஆறு எழுத்தே-உன்னுடைய சடாக்ஷரங்களே, தாவிய உள்ளமது ஆக - பொருந்திய உள்ளமாக, வெள்நீற்றைத்தரித்து-வெண்மையாகிய திருநீற்றைப்பூசி, உன்னையே-உன்னையே, கூவியபேர்கள் முன்-அழைக்கின்றவர்களுக்கு எதிரில், அஞ்சல் என்றே-பயப்படாதீராக என்று சொல்லிக்கொண்டே, வந்து கூடுவை-எழுந்தருளுவாய். (எ-று.)

ஏ. அசை:

முருகனை உள்ளவாறழைக்கின்றவரிடம் உடனே எழுந்தருளும் தயாநிதி என்பார் இங்ஙனங் கூறினர்.

இதனை;

"ஒருமுருகாவென்றெனுள்ளங்குளிரவுவந்துடனே
வருமுருகாவென்றுவாய்வெருவாநிற்பக்கையிங்ஙனே
தருமுருகாவென்றுதான்புலம்பாநிற்பத்தையன்முன்னே
திருமுருகாற்றுப்படையுடனேவருஞ்சேவகனே'' **என்பதாலறிக.**

கூடுவையன்பருள்ளாலயமாமெனக்கூடியிருந்
தாடுவைநீமுருகோனாறெழுத்தினையாரொருவர்
நாடுவர்நீயவர்கன்மந்தொடைத்துநரகரித்துப்
போடுவைநீயென்றுகண்டோரடைவர்நற்புத்திபதே.

(இ-ள்.) நீ அன்பர் உள்-நீ அடியார்கள் இதயகமலத்தை, ஆலயம் ஆம் எனக்கூடியிருந்து-கோவிலாகக்கொண்டு அதனிடஞ் சேர்ந்திருந்து, ஆடுவை-திருவிளையாடல் செய்வாய், நீ முருகோன் ஆறெழுத்தினை-நீ முருகனுன உன்னுடையசடாக்ஷரத்தை, யாரொருவர் நாடுவர் – விரும்பினவர்களுடைய, கன்மந்தொடைத்து-கர்மத்தைநீக்கி, நரகு அரித்துப்போடுவை-அவர்களுடைய நரகவேரையறுப்பாய் நீ-நீ, என்று-என்று, கண்டோர்-அறிந்தவர்கள், நற்புத்திபது அடைவர்-நல்லஞானத்தையடைவார். (எ-று.)

முருகனை உள்ளபடியுணருவோர்கள் மேலான ஞானத்தையடைவார்கள் என்பது கருத்து. (19)

புத்தியுநீமுருகோனாறெழுத்தின்பொருளறியச்
சத்தியுநீசிவமாயெங்குமாய்நின்றசர்வமுகச்
சித்தியுநீயன்பர்பார்க்கின்றஞானத்தெளிவுதரு
முத்தியுநீயன்றிவேறில்லைவேதமுடிந்திடமே.

(இ-ள்.) புத்தியும் நீ-அறிவும்நீயேயாவாய், முருகோன்-முருகனான உன்னுடைய,ஆறுஎழுத்தின்பொருள்-சடாக்ஷரத்தின் உண்மைப்பொருளை, அறிய-யாவருமுணர்ந்து கொள்ள, சத்தியும் நீ – அவர்களுக்குமனோபலந்தருபவனுநீயேயாவாய், சிவமாய்-சிவமென்னும் பொருளாயும், எங்கும் ஆய் நின்ற-எவ்விடத்திலும் நிறைந்திருந்த, சர்வமுகசித்தியும் நீ-சகல சித்துக்களையுந்தரவல்லவனும் நீயேயாவாய், அன்பர்-அடியார்கள், பார்க்கின்ற-அடைவதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற, ஞானம்தெளிவு தரும்-ஞானத்தெளிவைக் கொடுக்கின்ற, முத்தியும்-மோக்ஷமும், நீயன்றி-நீயேயாவாயேயல்லாமல், வேதம்முடிந்திடம்-வேதாந்தத்திலுங் கூட, வேறில்லை-வேறு உண்மைப் பொருளில்லை. (எ-று.)

பலசமயத்தார்களும் பலபல இடங்களைக் குறிப்பிப்பர், அவைகளி லெல்லாமிருப்பவனும் நீயேயாதலின் எவ்விடத்தும் நிறைந்தவன் நீயே என்றார். (20)

முடிந்திடம்பேச்சற்றமோனமெய்ஞ்ஞானமுதல்வநினைப்
படிந்திடமேபதிபாசம்பசுவிருட்பற்றற்றதும்
விடிந்திடந்தானென்னுநானென்னுமாயையும்விட்டெவையுங்
கடிந்திடத்தப்புறத்தப்புறத்தாநந்தங்காணுமதே.

(இ-ள்,) முடிந்த இடம்-இரண்டற்ற விடமானது, பேச்சுஅற்றமோனம்-சொல்லிறந்ததான மோனவிடமாம், மெய்ஞானம் முதல்வ-அவ்விடத்தையுணர்தற் கேதுவான மெய்ஞ்ஞான முதல்வனே! நின்னைப்படிந்த இடமே-உன்னைக்கலந்த இடமே, பதிபாசம்-பதியினிடத்துப்பற்றுற்று, பசு-ஆன்மாவானது, இருள்பற்று அற்றதும் - அந்தகாரமான பற்றை நீக்கினதும், விடிந்தஇடம்-பொழுதுவிடிந்த இடமு மாகும், தான் என்னும் நான் என்னும் மாயையும் விட்டு-நீ நான் என்று சொல்லிக்கொள்கிற மாயையையும் விட்டு, எவையும் கீடிந்த இடத்து-எல்லாவற்றையும் தாண்டின இடத்துக்கு, அப்புறத்து அப்புறத்து-அதீதமான இடமே, ஆனந்தங்காணும் அதே-பேரின்பங்காணு மிடமுமாகும் (எ-று.) (21)

காணுமென்பான்முருகோனாறெழுத்தின்கனியையுண்டே
பூணுமென்பாலைம்புலனுமொன்றாய்ச்சாம்பூரித்துள்ளாய்த்
தோணுமென்பாலிற்றையையூடசைவற்றசோதியொத்தா
லாணுமென்பார்பெண்ணுமென்பார்நின்பாலன்றறிவதுவே. ()

(இ-ள்.) காணும்-நான் காணுவேன், என்பான்-என்றுசொல்லும் ஒருவன், முருகோன் ஆறு எழுத்தின் கனியை உண்டு-சுப்பிரமணியக்கடவுளது ஆ

றெழுத்தாகிய பழத்தைப்பொசித்து, மென்பால்-மிருதுவாவனவாகப், பூணும்-இருக்கின்ற, ஐம்புலனும் ஒன்றாய் - பஞ்சேந்திரியங்களையும் ஒன்றுபடுத்தி, சரம்பூரித்து-பூரகஞ்செய்து, உள்ளாய்த் தோணும்-உள்ளிடத்தில் காணப்படுகின்ற, மென்பாலில் மிருதுவான இடத்தில், தயையூடு-அருளுடன், அசைவற்ற சோதி ஒத்தால்-சலிக்காமலிருக்கிற தேஜோமயத்தை ஒத்து அசைவற்றிருந்தால், நின்பால்—உன்னிடத்தில், அன்றறிவது-அப்பொழுதுதெரிந்து கொள்வது, ஆணும் என்பார் பெண்ணும் என்பார்-ஆண் என்று சொல்லுவர்சிலர், பெண்ணென்று சொல்லுவர் சிலர். (எ-று.) (22)

அறிவதுவேதநின்னாறெழுத்தைந்தெழுத்தாலதிலே
பிறிவதுமவ்வெழுத்தண்டபிண்டத்நிற்பெருஞ்சித்திவாய்ச்
செறிவதுமப்பதநின்றோரெழுத்துத்திகாந்தமுட்டி
மறிவதுகண்டுதன்னுள்ளேதெளிந்தமவுனங்களே.

(இ-ள்.) அறிவது தெரிந்து கொள்வது, வேதம்-வேதத்திற் சொல்லப்பட்ட, நின்—உன்னுடைய, ஆறெழுத்து ஐந்து எழுத்தால்-சடாக்ஷரத்தாலும், பஞ்சாக்ஷரத்தாலுமாகும், அதில் பிரிவதும்-அவ்வெழுத்துகளில் வேறாகப்பிரிவதுவும், அவ்வெழுத்து - அவ்வவ்வெழுத்துகளேயாம், அண்ட பிண்டத்தில்-வெளியிலும், உள்ளிலும், பெருசித்திவாய்ச்செறிவதும் - பெரிய கைவல்யமடைவதும், அப்பதம்-அச்சொல்லாலாகும், நின்று-அதிலிருந்து, ஓர்எழுத்து-ஒருஎழுத்தானது, திகாந்தம் முட்டி-திக்குகளின் அந்தங்களைமுட்டி, மறிவத-திரும்புவதையும், கண்டு—பார்த்து, தன்னுள்ளேதெரிந்த மவுனங்களே-தனக்குள் உணர்ந்த மௌனங்களேயாம். (எ-று.)

இதன் உண்மை குருமுகத்தாலறியக்கடவர். (23)

ஏதானவாறெழுத்துள்ளைந்தெழுத்தன்றெடுத்ததெல்லாஞ்
சூதாகநானென்றுருப்பண்ணும்வார்த்தையைத்தூக்குதற்கோ
ராதாரமாகியகமும்புறமுமருவுருவா
மோதாவுணர்வுமுயிருமதாய்நின்றதோரெழுத்தே.

(இ-ள்.) ஏது ஆன-காரணமான, ஆறு எழுத்து உள்—சடாக்ஷரத்துள், ஐந்தெழுத்து-பஞ்சாக்ஷரமாம், என்று-என்று, எடுத்தது எல்லாம்-எடுத்துக்கொண்டதெல்லாம், சூதாக-சூதாக, நான் என்று-நானே எல்லாப்பொருளும் என்று, உருப்பண்ணும்-பாவனை செய்கின்ற, வார்த்தையை - சொல்லை, தூக்குதற்கு-மேலாக்குதற்கு, ஓர் ஆதாரம் ஆகி-ஓர் துணையாய், அகமும் புறமும்-உள்ளிலும் வெளியிலும், அருவுருவாய் ரூபாரூபமாகிய, ஓதா உணர்வும்-சொல்லமுடியாத அறிவும், உயிருமதாய் நின்றது-உயிருமாய் நின்றதும், ஓர் எழுத்தே-ஓர் எழுத்தேயாகும். (எ-று.)

ஒரு எழுத்தே எல்லாவற்றிற்கும் ஆதாரமாம் என்பது கருத்து. (24)

ஒரெழுத்தாதிநிராமயமைவருமுன்னரிய
பேரெழுத்தவ்வெழுத்தேயம்மைதேவிபிறங்கவள்பா
லாறெழுத்துஞ்சடைவானவர்தாமவனோடுதம்மைச்
சீரெழுத்தாறுமோர்வேலாயெடுத்ததிருவருளே.

(இ-ள்.) ஐவரும் உன்னரிய—பஞ்சகர்த்தர்களும் இப்படிப்பட்ட தென்று நினைப்பதற்கரிய, நிராமயம்-நோயற்றதான, ஓர் எழுத்து-ஒருஎழுத்தே, பேர் எழுத்தாம்-மஹாட்சரமாகும், அவ்வெழுத்தே-அந்த எழுத்தே, அம்மைதேவி-சத்தியட்சரமாம், பிறங்கு அவள்பால்-விளங்குகின்ற அவளிடத்தில், ஆறு எழுத்தும்-ஆறு எழுத்துகளுந்தோற்றமாம், சடைவானவர் ஆய் அவனோடு அம்மை சீர் எழுத்தாறும்-சடையையுடைய பரமசிவனோடு பராசத்தியின் ஆறு எழுத்துகளுமே, ஓர் வேலாய் எடுத்த திருவுருவே-ஓர் வேலாக எடுத்த திருவடிவமே. (எ-று.)

ஆதலின் அவ்வுருவமே என்னை ஆளாக்கிக்கொள்ள வல்ல தென்பதாம்.

திருவுருவாகியசெவ்வேண்முருகனஞ்சிந்தையுள்ளே
யருவுருவாய்நின்றவாறெழுத்தாயுன்னியாண்பெண்ணிதென்
றொருவுருவாய்க்கொள்ளப்போகாதவரவருள்ளத்திலே
கருவுருவெப்படியப்படியேநின்றகாரணமே.

(இ-ள்.) திருவுருவாகிய-அழகியவடிவாகிய, செவ்வேள்-செவ்வேளாகிய, முருகன்-முருகக்கடவுளே, நம் சிந்தை உள்-நம்முடையமனத்தின்கண், அருவுருவாய் நின்ற-அருவமும் உருவமுமாயிருந்த, ஆறெழுத்தாய் உன்னி-ஆறெழுத்துகளாக எண்ணி, ஆண் பெண் இது என்று-ஆணென்றும், பெண்ணென்றும், ஒரு உருவாய்க் கொள்ளப்போகாது-ஒரு வடிவமாய்த் கொள்ளமுடியாது, அவரவர் உள்ளத்தில்-அவரவர்கள் மனத்தின்கண், கருவுரு எப்படி-முதலாகக்கொள்ளுகின்ற வடிவம் எப்படியோ, அப்படியே நின்ற காரணமே. அவ்வாறேயிருந்த காரணப்பொருளாம். (எ-று.)

முருகக்கடவுள்யார்எவ்வெப்பொருள்களாக எண்ணுகிறார்களோ அவ்வர் றெல்லாம் வெளிவருபவர் என்பது கருத்து.

எகாரங்கள் அசைகள். 26

காரணகாரியமிரண்டையுந்தாங்கிக்கடவுமுன்னாட்
பூரணஞானமுகமாய்ப்ரவேசிப்பப்பொங்கழலை
யாரணங்காப்பதெனவேயருவுருவாயநந்த
நாரணரூபமுஞ்சங்கரவேடமுநண்ணினதே.

(இ-ள்.) பொங்கு அழலை-மிக்க வேள்வித்தீயை, ஆரணங்காப்பது என-வேதமொழிகாப்பதுபோல, முன்னாள்-முன்காலத்தில், கடவுள்-முருகப்பெருமானவர், காரணகாரியம் இரண்டையுந்தாங்கி-காரண காரியங்களான இர

ண்டு வடிவங்களையுங் கொண்டு, பூரணஞானம்முகமாய் பிரவேசித்து-நிறைந்த அறிவு மயமாய் நுழைந்து, அருவுருவாய்-அருவாயும்உருவாயும், அநந்தம்-மிக்கதான, நாரண ரூபமும் சங்கர வேடமும் நண்ணினது-நாராயணர் வடிவமும் சங்கரர்வடிவமும் கொண்டார். (எ-று.)

முருகன் ஒருவனே எல்லாவடிவங்களுமானான் என்பது கருத்து. 27

நண்ணினவாறுமுகமாய்முருகனமதுளத்தி
லெண்ணினகாரியமெல்லாந்தரும்பொருளெல்லையில்லாக்
கண்ணினனாறெழுத்தானமெய்ஞ்ஞானகரும்புயர்ந்த
மண்ணினும்விண்ணினும்யாவுமொன்றாய்நின்றமாமயமே.

(இ-ள்.) எல்லையில்லாக்கண்ணினன் - அறிவற்ற கண்களையுடையவன், ஆறெழுத்தான மெய்ஞ்ஞானகரும்பு-ஆறெழுத்தே தனது வடிவமான உண்மையறிவானகரும்பு, உயர்ந்த-உயர்ச்சியான, மண்ணினும் விண்ணினும்-நிலவுலகத்திலும், விண்ணுலகத்திலும் உள்ள, யாவும்-எப்பொருள்களும், ஒன்றாய் நின்றமாமயமே-தானொருவனேயாய் நின்ற பெரும் பொருளானவரான, முருகன்-முருகக்கடவுள், நண்ணினவாறு முகமாய்-பொருந்தின ஆறுமுகமுடையவராய், எனதுளத்தில் எண்ணிய-என் நெஞ்சில்நினைத்த, காரியம் எல்லாம்-எல்லாப்பொருள்களையும், தரும்பொருள்-கொடுக்கின்ற பொருளாவர். (எ-.)

அடியார் நினைத்தவண்ணம் அருளவே முகமாறுடையனென்பார், 'நண்ணின வாறுமுகமாய் முருகன் எனதுளத்தில் எண்ணிய காரியமெல்லாந்தரும் பொருள்' என்றார். (28)

மாமயமாமுருகோனாறெழுத்ததுமற்றவரி
வோமயமாமவ்வுமுவ்வுமதாச்சுழித்தோங்குமுச்சிப்
பூமயமாய்ச்சிவமாய்ப்பறையாய்ப்பற்பொறியொடுநி
ராமயமாயெங்குந்தானாயிருந்தரகசியமே.

(இ-ள்.) மாமயம் ஆம்-பெரியதன்பொருளாதலான, முருகோன்-முருகனுடைய, ஆறெழுத்து-ஆறெழுத்துகளும், அரிஓம் மயம் ஆம்-திரண்ட பிரணவமயமாகவும், அவ்வும் உவ்வுமதாய்-அகர, உகர, மகரங்களாய்ப்பிரிந்தியல்வதாகவும், சுழித்து ஓங்கும்-சுழற்பட்டுயர்ந்த, பூமயமாய்-பூவின் வண்ணமாகவும், சிவமாய்-சிவமாயும், பரையாய்-உமையாகியும், பல்பொறியொடு-பலபொறிகளும், நிராமயமாய்-நோயற்றதுமான, எங்கும்-எவ்விடத்தும், தானாய் இருந்தரகசியம்-தானாயிருந்த மந்தணப்பொருளுமாகும். (எ-று.)

பிரணவமானது வியஷ்டியாகவும், சமஷ்டியாகவு மிரண்டென்பார் இங்ஙனங் கூறினார்.

“பகவதிகாவணமிசைதுயில்பயிலு
மிகலறுகுமரனையினிதருள்புரிக
அகரமுமுகரமுமகரமுமாகித்
திகழுறுபிரணவமெழுசிறுகளிறே” என்பதா லீதறியக்கிடக்கிறது ()

ரகசியமாமுருகோனறெழுத்தையுநம்பினர்க்குச்
சுகசெயமன்றியபசெயமில்லைத்தொழிற்படுத்துன்
முகசெயந்தம்பநமோகநம்பேதநமுன்னளிப்போ
டகசெயமுச்சமுஞ்சங்காரமெட்டிற்குமாதியதே.

(இ-ள்.) ரகசியம் ஆம்—மந்தணமான, முருகோன் முருகனுடைய, ஆறு எழுத்தையும் நம்பினர்க்கு-ஆறெழுத்துக்களையும் நம்பின அன்பர்களுக்கு, சுக செயமன்றி-நல்லவெற்றியே யல்லாமல், அபசெயமில்லை—தோற்பில்லை, தொழிற்படுத்து—யாவற்றையும் ஆட்டுகின்ற, உன் முகம்-உன்னுடையஆறுமுகமானது, தம்பனம் மோகனம் பேதனம், அளிப்பு ஒடு அகசெயம் உச்சமும் சங்காரம் எட்டிற்கும்-எண்வகைத்தாங்கிரமங்களுக்கும், ஆதியது-முதன்மையாகும். ()

முருகக்கடவுளுடைய ஆறெழுத்துகளும் மிகமந்தணமாய் நினைக்கக்கூடியதும் எண்வகைச்செயல்களுக்கும் முதன்மையானது, மாமென அறிக. (30)

ஆதிபரைகங்கைதெய்வானைவள்ளியரன்முருகன்
சோதிமுகமைந்துமாறுமுகமழுச்சூர்க்கதிர்வேற்
கோதிலிடபமயில்கொன்றைமாலைகுளிர்கடப்ப
மோதியவஞ்செழுத்தாறெழுத்தாஞ்சுடருற்பவமே.

(இ-ள்.) ஆதிபரை-ஆதிசத்தியும், பராசத்தியும், கங்கை-கங்காதேவியும், சோதிமுகம் ஐந்தும்-விளக்கமமைந்த ஐந்து முகங்களும், மழு-மழுவாயுதமும், கோதில்-குற்றமற்ற, இடபம்-எருத்து வாகனமும், கொன்றை-கொன்றை மலர்மாலையும், ஓதிய-அன்பர்களாலோதப்பட்ட, அஞ்செழுத்தும்-அஞ்சு எழுத்துக்களும் உள்ள, அரன்-சிவபெருமானிடத்தில், தெய்வானை வள்ளி-தெய்வானையும், வள்ளியும், ஆறுமுகமும்-ஆறுமுகமும், சூர்-சூரனைக்கொன்ற, கதிர்-ஒளியையுடைய, வேல்-வேலாயுதமும், மயில்-மயில்வாகனமும், குளிர்-குளிர்ந்த, கடப்பம்-கடப்பமலர்மாலையும், ஆறுஎழுத்தாம் சுடர்-ஆறுஎழுத்துகளுமுடைய, முருகன்-முருகனனவன், உற்பவமே-பிறப்பாகும். (எ-று.)

இச்செய்யுள் இறைவனிடம் முருகன் தோன்றினன் என்பதை விளக்குகின்றது. 31

சுடர்சங்குசக்கரம்வேற்சூலமழுவிற்சுரிகைகுளி
ரடர்தண்டுதண்டுகுடாரம்விட்டேற்றரிவாள்காக
மிடர்துஞ்சுபாசமெரிபாரைமாறேடிாறுகையும்
படரும்படிப்பொங்கியாறெழுத்தங்கிபரந்ததுவே.

(இ-ள்.) சுடர்-ஒளிக்கின்ற, சங்கு-சங்கும், சக்கரம்-சக்கரமும், வேல் சூலம் வேலாகிய சூலமும், மழு-மழுவும் வில்-வில்லும், சுரிகை-வாளும், குளிர்-தண்ணிய, தண்டு தண்டு-பெருந்தண்டமும், குடாரம்-குடாரமும், விட்டு ஏற்று-விட்டெடுக்கின்ற, அரிவாள்-அரிவாளும், காகம்—குடமும், இடர்துஞ்சு-

இடர்செய்வதால்வருத்துகின்ற, பாசம் கயிறும்,எரிபாரை-எரிகல்லும்,மானே டு-மானும் இருக்கின்ற, ஈராறுகையும் படரும்படி-பன்னிரண்டுகையும் எங்கு ம்பரவும்படி, பொங்கி-நிமிர்ந்து, ஆறெழுத்தங்கி-ஆறெழுத்துகளாகிய நெருப் பு, பரந்தது-வெளிப்பட்டது. (எ-று.) (32)

பரந்தந்தணன்செய்கைபல்லாயிரமும்பட்டூடுருவி
நிரந்தந்தரஞ்சிரம்பாதலம்பாதநின்றோர்முகமாய்த்
துரந்தன்றியாவையுஞ்சூர்க்களுமெற்றித்தொம்மென்னநடித்
தரஞ்சுந்தரஞ்சங்கரஞ்சம்புவாய்நின்றதாறெழுத்தே.

(இ-ள்.) அந்தணன்செய்கை-பிரமனது செயல்கள், பல்லாயிரமும்-யா வற்றையும்,ஊடுருவி-கடந்து, பரந்துநிரந்து-எங்குநிறைந்து, அந்தரம்-ஆகாயம் வரைக்கும் எட்டின, சிரம்-தலையும், பாதலம்-பூமியைக்கடந்த, பாதம்-திருவடி களுமாக, நின்று-இருந்து, ஓர்முகமாய்துரந்து-ஒருமுகமாகக்கடந்து, அன்று-அக்காலத்தில், சூர்க்களும்-சூரனாதியர்களையும், எற்றி-வென்று, தொம்மென் னநடித்து-தோம் தோம் என்று கூத்தாடி, அரன் சுந்தரஞ் சங்கரஞ் சம்புவாய் நின்றது ஆறெழுத்து-அரன்முதலியோராகநின்றதும் ஆறெழுத்தேயாகும். எ-

முருகக்கடவுளினது விஸ்வரூபங்கூறியவாறு மென்றறியக்கடவர்.

எழுத்தாறுமொன்றுபட்டேகிக்கருத்துளெழுந்ததொனி
வழுத்தாதமூலமுருகன்பொற்றாடீணவைத்துளத்தே
பழுத்தோகையன்பொடிரவும்பகலும்பரமுனக்கென்
றழுத்தாதுசத்தப்பிறவிக்கடல்விட்டகலரிதே.

(இ-ள்.) எழுத்தாறும்-ஆறெழுத்துகளும், ஒன்றுபட்டு-பொருந்தி, ஏகி-போய், கருத்துள் எழுந்ததொனி-மனத்திலுண்டான சத்தத்தை, வழுத்தாது-போற்றாமலும், மூலம் முருகன்-முதன்மையானவனான முருகனுடைய, பொற் றாள்-பொன்போலுந்திருவடியை உள்ளத்துவைத்து - மனதின்கண்வைத்து, ஓகைபழுத்து - விருப்பமிகுந்து, இரவும்பகலும்-இராத்திரியும் பகலும், அன் போடு-விருப்பத்துடன், பரம்-உயர்வாந்தன்மை, உனக்கு என்று-உனக்கே யாமென்று, அழுத்தாது-உறுதியாய்க்கொள்ளாமலும், சத்தம்-ஏழாகிய, பிற விக்கடல்விட்டு -பிறப்பென்கிற கடலைவிட்டு, அகல்வு - நீக்குவது, அரிது-இல்லை. (எ-று.)

உம்மை அரண்டுந்தொகுத்தல்.
இதுபிறவியை ஒழிக்கும்வழியைக்கூறிய தென்க. (34)

பிறவிக்கடற்குடற்சக்கரமாவிபெருஞ்சரக்கி
லறவித்தபத்தொன்பதாறுமச்சாணியயன்கையினு
னிறவித்தமந்திரமூன்றுநங்கூர்முன்னஞ்செழுத்துந்
துறவித்தவொட்டன்குகனுறெழுத்தின்சுயகர்த்தனே.

(இ-ள்.) பிறவிக்கடற்கு-பிறப்பாகியகடலைக் கடப்பதற்கு, உடல் சக்கரம்-உடலாகிய சக்கரமும், ஆவி-உயிராகிய, பெருஞ்சாக்கில்-மிக்க சாக்குகளும், அறவித்தபத்தொன்பதாறும்-இருபத்தைந்து தத்துவங்களும், அச்சாணி-அச்சாணிகளும், அயன்கையினல் நிறவித்த-பிரமன் தன்கையினுல் ஒழுங்குபடுத்தின, மந்திரமூன்றும்-மூன்றுமந்திரங்களும், நங்கூரம்-நிறுத்துஞ்சாமானும், முன் அஞ்செழுத்தும்-தலைமைபட்ட அஞ்செழுத்துகளும், துறவித்த-ஏற்படுத்தின, ஒட்டன்-தலைவனை, குகன்-முருகன், ஆறெழுத்தின்சுயகர்த்தனே-ஆறெழுத்தின் உண்மைத்தலைவனுவான். (எ-று.)

கத்தன்பரங்கிரிசீரலையேரகங்காண்பலகுன்
றத்தன்றென்சோலைமலையாவினன்குடியாறுமென்பர்
வித்தென்பதாயென்னுளாதாரமாறும்வெவ்வேறுருவாம்
பித்தன்சருவகுருவாஞ்சடாக்கரப்பேரொளிக்கே.

(இ-ள்.) வித்து என்பதாய்-யாவற்றிற்குங்காரணப்பொருளென்று சொல்லப்பட்டதாய், என்னுள்-என்னிடத்திலிருக்கும், ஆதாரம் ஆறும்-ஆறுதாரங்களிலும், வெவ்வேறு உருவாம்-வேறு வேறு வடிவங்களாயிருக்கின்ற, பித்தன்-பித்தனும், சருவகுருவாம்-எல்லாவற்றிற்குங்குருவுமான, சடாக்கரப்பேரொளிக்கு-சடாக்கரங்களுக்குத்தலைவனுய்பெரியஒளிமயனுயுள்ள இறைவனை, பரங்கிரி-திருப்பரங்கிரி, சீரலை-திருச்சீரலைவாய், ஏரகம்-திருவேரகம், பலகுன்று-குன்றுதோறாடல், தென்-அழகிய சோலைமலை-திருப்பழமுதிர்சோலை, ஆவினன்குடி-திருவாவினன்குடி, ஆறும்-ஆறுக்கும், கத்தன் அத்தன் என்பர் தலைவனென்று சொல்லுவார்கள். (எ-று.) (36)

குருவானவையன்சடாக்கரத்தாகமங்கூறிமுன்னே
யருவானவெட்டவெளிபாழுரையுணர்வற்றவிடம்
பெருவானறிவுதெளிவாயளவற்றபேரொளியா
யுருவானதீதமுருவாம்படிக்கனிவுற்றதுவே.

(இ-ள்.) குருவான ஐயன்-எனக்குக் குருவானமுருகனனவன், சடாக்கரத்து ஆகமங்கூறி - ஆறெழுத்துக்களிலேயே ஆகமங்களெல்லாவற்றையுஞ்சொல்லி, முன்னே-முன்னதாக, வெட்டவெளி-வெறுவெளியையும், பாழ்-வெறும் பாழையும், உரையுணர்வு அற்ற இடம்-பேச்சும் அறிவுங்கடந்த இடமுமாகிய இவற்றை, பெறுவான்-அடையும்படி, அறிவு தெளிவாய்-தெளிந்த அறிவாய், அளவற்ற பேர் ஒளியாய்-மிக்க பெரு ஒளியாய், உருவான அதீத உருவாம்படி-ரூபாதீதவடிவமாம்படி கனிவுற்றது-என்னைக்கனியச் செய்தது. (எ-று.) (37)

உற்றதுமெவ்விடமிவ்வண்ணமின்னதென்றோதநினைப்
பற்றதுபற்றற்றதும்மனப்பாவகமானதெங்கே
பெற்றதேயவந்தாமோமூச்சுவிட்டதுபின்பசைவாய்ச்
சொற்றதுசொற்றிடத்துண்டுளந்தேக்கித்துணுக்கென்றதே.

(இ-ள்.) உற்றதும் எவ்விடம் - எவ்விடத்திலிருக்கிறது? இவ்வண்ணம்-இவ்விதமாகவும், இன்னது-இதுவும், என்று-என்று, ஓத-சொல்ல, நின்னை-உன்னைப், பற்றிய பற்று அதும்-அன்பும், பற்றற்றதும்-பற்றில்லாததும், மனப்பாவகம் ஆனதும் எங்கே-மனத்தில் எண்ணக் கூடியதன்மையானது மெங்கே, பெற்றதே அவம் - அவ்வாறு பெற்றதெல்லாம் வீணே, தாமோ-அவைகளோத மூச்சுவிட்டது-கெட்டுப்போயின, பின்பு-பிறகு, அசைவாய்ச் சொற்றது-குறியாற் சொன்னதைச், சொற்று-சொல்லி, இடத்து-உண்ணவேண்டிய இடத்திலிருந்து, உண்டு-உண்டு, உளம்-மனமானது, தேக்கி-தெவிட்டி, துணுக்குற்றது-திடுக்கிட்டது. (எ-று.)

துணுக்கென் றுயமுன்சரணஞ்சரணெனத்தோற்றியொரு
கணுக்கிண்டிலையுடன்பூத்ததுகாய்த்துக்கனிவடிவாய்த்
திணுக்கென்றுள்ளூடெழுஞ்செக்கரும்பச்சையுந்திங்களுமா
யணுக்கண்டதுண்டிலையென்றேநிசபரமானதுவே.

(இ-ள்.) துணுக்கென்று உய-விரைவாய்ப் பிழைப்பதற்கு, முன்-முன்னதாகவே, சரணம் சரண் என-திருவடிகளுக்கே அடைக்கலமென்று சொல்ல, தோற்ற-வெளிப்பட்டு, ஒருகணுகிண்டு-ஒருகணுவைக்கிண்டின, இலையுடன்-இலையுடன், பூத்தது-பூவிட்டது, காய்த்து-பின்னர் காயாய், கனிவடிவாய் அதன் பின்னர் பழத்தின் வடிவமாய், திணுக்கென்று விரைந்து, உள் ஊடெழும்-அகத்தின் கண்கிளம்புகிற, செக்கரும்-செம்மையும், பச்சையும்-பச்சையும் திங்களுமாய்-வெண்மையுமாய், அணு-நெருங்குதலால், கண்டது-பார்த்தது, உண்டு இல்லை-உண்டு இல்லை, என்று-என்று சொல்லுதற் காய், நிசம்-உண்மையான, பரம் ஆனதுவே-உயர்ந்த பொருளானதாம். (எ-று.)

நிசபரமானது எல்லாப் பொருளுமாய் இருந்தது என்பார் இங்ஙனங் கூறினர். 39

பரமானதாதிசிவமாதிசத்தியுற்பத்திமுத்தி
யுரமானபார்வையுறுவிந்துநாதத்துதிமௌனந்
திரமானசற்குருதேசிகநாமந்திடாரித்தநந்
தாமாமகாரமுகாரமோங்காரித்துச்சத்தித்ததே. (40)

(இ-ள்.) பரமானது-பரம்பொருளானது, ஆதி-ஆதியும், சிவம் ஆதி-சிவம் முதல், சத்தி-சிவசத்தியாதி யாயுள்ளதும், உற்பத்தி முத்தி-சிருஷ்டியும், மோக்ஷமும், உரம் ஆனபார்வை-பலமான திருநோக்கும், உறுவிந்து-பொருந்தினவிந்துவும், நாதம்-நாதமும், துதிமவுனம்-துதிக்கக் கூடிய பேசாமையும், திரமான-நிலையுள்ள, சற்குருதேசிக நாமம்-சற்குருவான ஆசிரியப் பேரை, திடாரித்து-தாங்கி, அநந்தரம்-அதன் பிறகு, ஆம்-பகாருந்தின, அகாரம் உகாரம்-அகாரமும், உகாரமும், ஓங்காரித்து - பிரணவமாயும், சத்தித்தது-ஒலியுண்டாக்கியது. (எ-று.)

சத்தித்ததவளன்றானாயவனவடன்வடிவாய்
முத்தித்தபிச்சைமுழுமுதலாய்ச்சண்முகவடிவா
யத்தித்தறுசமயதொழிலாறுக்குமாறெழுத்தாய்ச்
சித்தித்தென்னாவிவிளையாடலண்டத்தின்செய்கையதே.

(இ-ள்.) சத்தித்த-கோஷித்த, தளவன்-ஞானமூர்த்தியானவன், தானாய்-அவனாகியும், அவன்-அவனே, அவள் தன் வடிவாய்-அவளுடையவடிவாகியும், முத்தித்த-மோக்ஷமாகிய, பிச்சை-யாசகஞ் செய்கிற, முழுமுதலாய்-உயர்ந்த பெரும்பொருளாயும், சண்முக வடிவாய்-ஆறுமுகவடிவாயும், அத்தித்து-பொருளாய், அறுசமயம் - அறுவகைச்சமயத்தார், தொழில்-கொள்ளற்குரித்தான தொழில்கள், ஆறுக்கும் - அறுவகைக்கோட் பாடுகளுக்கும், ஆறு எழுத்தாய்-ஆறெழுத்துகளாயும், சித்தித்து-கைகூடி, என்னாவி-என்னிடத்தில், விளையாடல்-விளையாடல் போலவே, அண்டத்தின் செய்கையது-புறஅண்டத்திலுஞ் செய்யுஞ்செய்கை களாம். (எ-று.) (41)

அண்டத்திலுள்ளதுபிண்டத்திலுமுண்டவ்வாறெழுத்தும்
பண்டித்ததற்சதகோடிமகாசித்திபண்ணுதற்காய்த்
துண்டத்துடலுயிராயபரைசெய்தசூத்திரத்தாற்
கண்டித்தநமசிவாயாவெனவுருக்காட்டியதே.

(இ-ள்.) அண்டத்திலுள்ளது-அண்டத்தினுள்ளது போலவே, பிண்டத்திலும் உண்டு-பிண்டத்திலு மிருக்கின்றது, அவ் ஆறெழுத்தும்-(ஆகையால்) அந்த ஆறெழுத்துகளும், பண்டித்த-முதிர்ந்த, தன்-தன்னுடைய, சதகோடி மகா சித்தி பண்ணு தற்கா-நூறுகோடிபெருஞ் சித்தியை முடிப்பதற்காக, துண்டத்து-புவனந்தோறுமிருக்கிற, உடல் உயிராயபரை-உடலின் கணுள்ள உயிர் போன்ற பரை, செய்த சூத்திரத்தால்-செய்தவழியில், கண்டித்த - அகண்டமற்ற, நமசிவாயா-நமசிவாய, என-என்று சொல்லும்படி, உருகாட்டியது-வடிவுகாட்டியதாம். (எ-று.) (42)

உருவானமூலமதுவட்டநாலிதழுள்ளின்முக்கோ
டருவாம்பிரணவச்சத்தியுட்சவ்வுஞ்சருவமயக்
குருவாமதோமுகமவ்வேதியானங்குளிர்ந்தலிங்க
மருவாமவையிவைதானேகணபதியானதுவே.

59773

(இ-ள்.) உருவான - வடிவையுடையதான, மூலமது - மூலாதாரமானது வட்டநால் இதழ்-ஒருவட்டத்தினுள் நாலிதழோடு கூடிய, உள்ளின்-அதற்குள், முக்கோடு-முக்கோணவடிவுள்ளதாம், அருவாம் - (அதற்குள்) வடிவில்லாததாயிருக்கின்ற, பிரணவசத்தியுள்-ஓங்காரத்தின் வன்மையுள், சவ்வும்-சர்வமயம்—எல்லாந்தானேயாம், குருவாம்—உயர்ந்த தாயுமிருக்கிற, அதோமுகம், கீழ்முகமாயிருக்கிற, மவ்வே-மகாரமே, தியானம்-தியானிக்கிற காரண எழுத்தாம், குளிர்ந்த-குளிர்ச்சியையுடையதான, லிங்கம் - முதற்காணமான,

அருவாம் அவையிவை-வடிவற்ற அவ்விரண்டும் தானே-தானே, கணபதி யானது-கணங்களுக்குத் தலைவருமாயினவாம். (எ-று.)

எல்லாவற்றிற்குங்காரணம் நகர மகரங்களே என்று கூறி மூலாதாரத்தைக் கூறியவாறும். (43)

ஆனமண் ணாறிதழ்நாற்கோணம்பொன்னிறமஞ்சுகுண
மீனமின்மூலமதுள்ளினொவ்வாகுமிவையுவந்த
பானமமிர்தமுகஞ்சத்திதேவிசொற்பார்வதியா
டானுயர்மந்திரநவ்வாகுநான்முகன்சக்கரமே.

(இ-ள்.) ஆனமண்-பொருந்தின பிருதிவியானது, ஆறு இதழ் நாற்கோணம்-நாற்கோணங்களும் ஆறிதழ்களு முள்ளதும், பொன் நிறம்-மஞ்சள் நிறமுள்ளதும், ஈனம் இல் மூலமது உள்ளின் ஒவாகும்- குற்ற மற்ற மூலத்தை எண்ணிப்பார்த்தால் ஒவ்வாம், இவை—இதன்தலைவன், உவந்த-விரும்பின, பானம் அமிர்தமுகம்-பானமானது அமிர்தமாகும், சத்திதேவி சொற்பார்வதியாள்தான்-இதன் தேவி சரஸ்வதியும் அவட்குமுன் பார்வதியுமாவள், உயர் மந்திரம் நவாம்-உயர்ந்த மந்திரஎழுத்து நகாரமாம், நான்முகன் சக்கரமாம்-இங்கு பிரமதேவனிருக்குமிடமாம். (எ-று.)

இது பிருதிவி சக்கரம் கூறியவாறும். (44)

காமாயவைப்பிறைகோணமெண்பத்திகழ்காண்குணமாற்
றமாயருளவுவப்பலங்காரமுட்டந்தையதாய்
வரமாயதேவிதிருமுகம்வாமமாமந்திரமே
திரமாயதோநமநாராயணவரிசெய்கையதே.

(இ-ள்.) காமாயஜ-திதித் தொழிற் செய்தலை யுடைய மாயனுந் தெய்வத்திற்கு, பிறைகோணம்-பிறையைப்போலுங் கோணமாம், இதழ் எண்-இதழ்களின் எண்ணனது, பத்து-பத்தாம், குணம்-உயர்குணத்தையுடைய, மால்-விஷ்ணுவானவர், தரமாய் அருள-உயர்வாய் ரக்ஷிக்க, உவப்பு-விருப்பும், அலங்காரம்-அணியையும், உள்—நினைக்கின்ற, தந்தையதாய்-தகப்பனுமாய், வரம் ஆய - வரந்தருள் பவளான தேவியின், திருமுகம் - திருமுகமானது, வாம மந்திரம்-வாமதிரு மந்திரமாகும், திரமாயது-அந்த வன்மையுள்ளது, ஓம் நம நாராயண-ஓம் நமோ நாராயண என்பதாம், அரிசெய்கையதே-இதுவே விஷ்ணுவின் காத்தற்றொழிற்குரியதாம். (எ-து.) (45)

அரிவன்னிசெம்மைமுக்கோணமுமுன்னிதழாறிரண்டாந்
தரியுண்மைநவ்வுஞ்சிவன்சத்திபார்வதிதானுளதாம்
பரியுண்மைதேத்ரமகோரமுகமன்பர்பாவமறத்
தெரியுண்மைமந்திரஞ்சிகாரமுருத்திரன்சேவடியே.

(இ-ள்.) அரிசெம்மை வன்னி-மஞ்சளும் சிவப்புங் கலந்த அக்கினியும், முக்கோணமும்-மூன்று கோணங்களும், முன்-வெளியில், ஆறிரண்டிதழாம்-

பன்னிரண்டிதழ்களுமாம், பரி-விரும்புகின்ற, உண்மை-உண்மையான, மவ்வும்-மகாரமும், சிவசத்தி-சிவசத்தியாகிய, பார்வதிதான் உளதாம்-பார்வதியானவள் உள்ள இடமாம், அகோரமுகமாம்; அன்பர் பாவம் அற-அன்பர்களது பாவமானது நீங்க, தெரி-தெரிந்துகொள்கிற, உண்மைமந்திரம்-மெய்யான மந்திர மானது, சிகாரம்-சிகாரமாகும், உருத்திரன் சேவடியே-அதுவே உருத்திரமூர்த்தியின் செம்மையான திருவடிகளாகும். (எ-று.) (46)

அடியானவாயுகறுப்பறுகோணம்பதினாறிதழ்மேற்
றிடியானிரண்டுகுணம்பொருட்பேர்வவ்வுதேகலிங்கம்
பிடியானசாம்பவிசத்திமுகந்தற்புருடம்மருட்
டுடியானமந்திரமேவம்மயேசுரன்தோற்றங்களே.

(இ-ள்.) அடியானவாயு-மேல் மூலமானவாயுவானது, கறுப்பு - கறுப்பாகும், அறுகோணம்-அறுகோணமுடையதாம், பதினாறு இதழ்-பதினாறிதழ்களுடையதாம் மேற்று-மேலுள்ளதாய், இடியான-தாக்குவதான, இரண்டுகுணம்-இரண்டுகுணங்களுள்ள தாம், பொருட் பேர் வவ்வு-பொருளின் பேரானது வவ்வாம், தேக லிங்கம் - சரீரலிங்கமாம், பிடியான-பெண்யானை போன்ற சாம்பவி-சாம்பவியும், சத்தி-சத்தியுமானவள், முகம்-முகமானது, தற்புருடம்-தற்புருடமாம், அருள்துடியானமந்திரம்-திருவருட்டோற்றமான மந்திரமாகும், மயேசுரன்தோற்றங்களே-மகேஸ்வரன்தோற்றங்களாம். (எ-று.) (47)

தோற்றியவானதுதூநிறவட்டந்தொடுமிதழ்ரண்
டேற்றியவோர்குணமவ்வாம்பரம்பற்றியேபிரியுஞ்
சாற்றியபங்கின்மனோன்மணிதேவியீசானமுகம்
போற்றியவவ்வரிநீயுஞ்சதாசிவபூரணமே.

(இ-ள்.) தோற்றியவான் அது - காணப்பட்ட ஆஞ்ஞாவானது, தூநிறம்-சுத்தமானதேஜோமயமானதாம், வட்டம்-வட்டவடிவினதாம், தொடும் இதழ்-அதில் கூடியிருக்கின்ற இதழானது, இரண்டு-இரண்டாகும், ஏற்றிய ஓர் குணம் - சத்துவகுணமாம், அவ்வாம்-மந்திரபீஜம் அவ்வாகும், பரம் பற்றியே பிரியும்-உயர்ந்தபராபரவஸ்துவினிட மிருந்து பிரியும், சாற்றிய-யாவராலும் துதி செய்யப்பட்ட, பங்கின்-ஒருபக்கத்திலுள்ள, மனோன்மணி தேவி-துதி செய்யப்படுகின்ற மனோன்மணி தேவியினுடைய, ஈசானமுகம்-ஈசானமுகமாம், போற்றிய-துதிசெய்யப்பட்ட, வவ் அரி நீயும், மந்திரங்களாம், சதாசிவம் பூரணம்-அங்குநிறைந்தபொருள் சதாசிவமேயாம். (48)

பூரணமாகியவான்காலனலப்புபூமியிவை
சாரணமூலமுந்தானாகியோரிதழ்த்தாமரைமேற்
காரணவவ்வுமென்னுள்ளஞ்சுடர்ப்பிறைகாட்சியுமா
யாரணயோகிபராசத்திதேவிநின்னங்கமதே.

(இ-ள்.) பூரணம் ஆகிய-பொதுக்குணமாகவும், சிறப்புக்குண மாகவும் எங்கும் நிறைந்த, வான், கால், அனல், அப்புபூமி இவை, இவ்வணம் பூதங்களும், சாரணமூலமும்தான் ஆகி-சாரணமான முதல்பொருளும் தானே ஆய், ஒரு இதழ்தாமரைமேல்-ஒரி தழினையுடையதாமரை மலரின்மேலுள்ள, காரணவவ்வும்-எல்லாவற்றிற்கும் முதற்பொருளான, வவ் என்னும் மந்திராக்ஷரமும், என் உள்ளம்-என்மனத்தின்கண், சுடர் பிறைகாட்சியும்-சந்திரவெளிச்சமும், ஆரணயோகி பராசத்தி தேவி-வேதங்களில் சேர்ந்திருக்கின்றவளே! பராசத்தியே! தேவியே! நின்னங்கம் அது ஆம்-உன்னுடைய அங்கமேயாம். (எ-று.) (49)

ஏயுமிதழ்ப்பத்தொன்றினுநின்றவோரெழுத்துறுப்பாங்
காயமுட்சக்கரமாறெழுத்தாகுறுங்காத்ரமுயிர்
பாயும்பிரணவமேபரைதோற்றம்பலசித்திகொண்
டாயுமுடற்பொருளாவியும்வேட்சுழியாநந்தமே.

(இ-ள்.) ஏயும்-பொருந்தின, இதழ்பத்தொன்றினும்-பதினோரிதழ்களிலும், நின்ற-இருந்த, ஓர் எழுத்து உறுப்பாம்-ஒரு எழுத்துக்கு உறுப்பாகிய காயம் உள் சக்கரம்-சரீரத்தின் உள்ளே உள்ள சக்கரத்திலுள்ள, ஆறுஎழுத்து ஆறும்-சடாக்ஷரங்கள் ஆறும், காத்ரம்-சரீரமும், உயிர்-உயிருமாம், பாயும் பிரணவமே-எல்லாவற்றிலும் பரவியிருக்கிற பிரணவமே, பரைத்தோற்றம்-பராசத்தி உண்டாதற்குக்காரணமாம், பலசித்தி கொண்டு-பலவகையான சித்திகளைக்கொண்டு, ஆயும்-ஆராய்கின்ற, உடல்பொருள் ஆவியும்-உடல், பொருள், ஆவியும், வேள்சுழி ஆநந்தமே-சுப்பிரமணியக் கடவுளுடைய பிரணவாநந்தமாகும். (எ-று.) (50)

களியாதொருவர்க்குத்தோயாதிங்கன்பர்க்குத்தோயும்வெட்ட
வெளியாணையில்லைமெய்ஞ்ஞானவதீதம்விளங்கியசொற்
றளியாறெழுத்துள்ளவாதாரமாறேடுதற்பரைவிட்
டளியாதிடத்திற்குருமுருகேசனின்றதிசயமே.

(இ-ள்.) களியாது-சந்தோஷியாமலும், தோயாது ஒருவர்க்கு-ஒருவர்க்குள்ளும்படியாமலும், அன்பர்க்குதோயும்-அன்புள்ளவர்கள் உள்ளத்தில்படிகின்ற, வெட்டவெளி-வெறும் வெளியின், ஆணையில்லை-ஆக்கினையில்லாமல், மெய்ஞான அதீதம் விளங்கிய-உண்மைஞானாதீதமானது வெளிப்பட்ட, சொல்-சொல்லாகிய, தளி-ஆநந்தம்பொழிகின்ற, ஆறு எழுத்து உள்ள-ஆறெழுத்துகளாகவுள்ள, ஆதாரம் ஆறோடு-ஆறாதாரங்களுடன், தன்பரைவிட்டு-ஆதிசத்தியைவிட்டு, அளியாத இடத்தில்-கொடாத இடத்தில், குருமுருகேசன்-குருவாகிய முருகேசன், நின்ற அதிசயமே-எழுந்தருளியிருந்த அதிசயமே உயர்ந்ததாம். (எ-று.) (51)

அதிசயமாறெழுத்தாறுஞ்சிவமுமறுமுகமாய்க்
கதிசெயுமூரற்பகைநெற்றிக்கண்ணெனக்காட்சியுமாய்
விதிசெயுமாமயில்வேற்சத்தியாவுங்கைவேற்படையாத்
துதிசெயுமன்பர்முன்னோங்காரவட்டத்துட்டோன்றியதே.

(இ-ள்.) அதிசயம்-ஆச்சரியத்தை விளக்கின்ற, ஆறுஎழுத்து ஆறும்-சடாக்ஷரம் ஆறுமே, சிவமும்-சிவமூர்த்தமாயும், அறுமுகமாய்-ஆறுமுகக்கடவுளாகவும், கதிசெயும்-கதியைச்செய்கின்ற, மூரல்பகை நெற்றிக்கண் என-பற்பகை நெற்றிக்கண் பகை என்னும்படி, காட்சியுமாய்-தோற்றமுமாய், விதிசெயும்-பிரமாவின் தொழிலைச்செய்த, மாமயில் சத்தியாயும்-பெரிய மயிலின் சத்தியாயும், வேலின்சத்தியுமாகியயாவும், கைவேற்படையாக-கையிலுள்ள வேற்படையின் பெருமையாகக்கொண்டு, துதிசெய்யும்-துதிசெய்த, அன்பர் முன்-அடியார்களுக்கு முன்பாக, ஓங்காரவட்டத்துள்-ஓங்கார மென்னும் வட்டவடிவும் தோன்றியது-காணப்பட்டதாகும். (எ-று.) (52)

ஓங்காரவட்டத்துளாதாரமாறும்விட்டோங்கியரி
ரீங்காரவட்டத்துளேவிந்துநாதமிணைச்சுடர்மேல்
பாங்கானபரசிவமாகியொன்றாய்ப்பரவெளிநின்
றாங்காரத்தாண்டவிவாறெழுத்தாறுமுகத்தம்மையே.

(இ-ள்.) ஓங்கார வட்டத்துள் ஆதாரம் ஆறும்விட்டு ஓங்கி-ஓங்காரமான வட்டவடிவுள் ஆறுதாரங்களையும் விட்டுயர்ந்து, அரிரீம்காரவட்டத்து உள்-இதனுள், விந்துநாதம் இணைசுடர்மேல்-விந்து நாதங்களாகிய இணை யொளியின்மேல், பாங்கு ஆன-எல்லா நற்குணங்களும் நிறைந்த, அம்-அழகிய, பரசிவமாகி, ஒன்றாய், பரவெளி—பரவெளியுமானதில், நின்று-இருந்து, ஆங்காரத்து ஆண்ட-வன்மையொடு ஆண்ட, இ ஆறு எழுத்தும் - இந்தச் சடாக்ஷரங்களெல்லாம், ஆறுமுகத்து அம்மேயே-ஆறுமுகமாகக் கொண்ட அம்மையே. (எ-று.) (53)

ஆறுமுகத்தம்மைவேலாயிநின்னெழுத்தாறுமுரு
வேறுமுகத்திற்கிலக்கோர்முகமில்லைவெவ்வினையைச்
சீறுமுகத்துக்குமாராயியன்பர்சிந்தித்துநினைப்
பேறுமளித்தவர்க்குள்ளெழுத்தாந்திறற்பெண்கொடியே.

(இ-ள்.) ஆறுமுகத்து அம்மை-ஆறுமுகங்களையுடைய அம்மையே, வேலாயி நின் எழுத்து ஆறும்-உன்னுடைய சடாக்ஷரங்களெல்லாம், உருவேறு-வேறுருவினதாகவிருந்தாலும், முகத்திற்கு இலக்கு ஓர் முகமும் இல்லை-உன்முகக்குறிபோல் ஒரு முகமு மில்லை, வெவ்வினையை சீறு முகத்துக்குமராயி-கொடியவினைகளைப் போக்கு முகத்தையுடைய குமராயி; அன்பர் நின்னை சிந்தித்து-அடியர்கள் உன்னைச் சிந்தித்தனால், பேறும் அளித்தவர்க்குள் எழுந்து ஆம்-அவர்கட்கோ பேற்றைக்கொடுத்து அவர்களுள்ளத்திலு மெழுந்தருளின, திறல் பெண்கொடியே-வெற்றியையுடைய பெண்கொடியெ. (எ-று.)

பெண்கொடிமேல்பரமாயிசிவாயிபிரணவத்தி
நண்கொடியேமுருகாயிசிவாயிநலமுடைய
பண்கொடியேயென்னுளமேயிரவும்பகலும்விடா
தண்கொடியாதிசடாக்கரியீஸ்வரியம்பிகையே.

(இ-ள்.) பெண்கொடி-பெண்கொடியே, மேல்பரமாயி-உயர்ந்தபர மாயியே! சிவாயி-சிவாயியே! பிரணவத்தி-பிரணவ வடிவினளே! நண் கொடியே-நண்ணிய கொடிபோல்வாளே! முருகாயி சிவாயி; நலம் உடையபண் கொடியே-நன்மையையுடைய இசையமைந்தகொடியே! இரவும் பகலும்-அகோராத்திரம், என் உளம் அண்கொடி-என் மனத்திலுள்ள கொடியே, ஆதிசடாக்கரி! ஈஸ்வரி! அம்பிகையே! (எ-ள்.) (55)

அம்பிகையைம்பத்தோரக்கரியுச்சரியன்பர்தமை
தம்பிகைவெவ்வினைச்சங்கரிசூலிசரமசரம்
தும்பிகையைந்துடையான்றொழில்வாசிசுகந்தனெனக்
கும்பிகையம்பாவல்லிசடாக்கரிகுண்டலியே.

(இ ள்.) அம்பிகை ஐம்பத்தோர் அக்கரி உச்சரி-அம்பிகையே! ஐம்பத்தோரக்ஷரரூபியே! அன்பர்கள் உச்சரிக்கும் ரூபமா யுள்ளவளே!, அன்பர் தம்மை தம்பிகை வெம்மை வினை சங்கரி- அடியார்களுடைய வெவ்வினைகளைப்போக்கடிப்பவளே, சூலி- சூலாதயுத்தாளே! தும்பிகையைந்து உடையான் தொழில்-தும்பிக்கையோடு ஐந்துகைகளையுடைய விநாயகனின் மூலாதாரத் தொழிலாகிய, வாசிசுகந்தன் என-வாசியான நன்மணமுள்ளவனென்று, சொல்லப்படும், கும்பிகை-கும்பகத்தால் உணரக்கூடியவளே! அம்பாவல்லியே! சடாக்கரியே! குண்டலியே! (என்னையாதரிப்பாய்.) (எ-று.) (56)

குண்டலிபாரதிலக்குமிபார்வதிகோமளைப்பூ
மண்டலிசாம்பவிதேவிமனோன்மணிவாகினிப்ர
சண்டலிகாரியகாரியுகாரிசடாக்கரிமா
விண்டலியாண்பெண்ணிரண்டுருவாய்நின்றமின்னொளியே.

(இ-ள்.) குண்டலி - மூலாதாரியே, பாரதி-சரச்சுவதியானவளே, இலக்குமி-இலக்ஷ்மியானவளே! பார்வதி-பார்ப்பதியானவளே, கோமளை-பச்சை வடிவினளே! பூமண்டலி-பூமண்டலங்களை யெல்லாம் பெற்றெடுத்தவளே! சாம்பவி-சாம்பவியே! தேவி-தெய்வமாயுள்ளவளே! மனோன்மணி—மனோன்மணித்தாயே! வாகினி-வாகினியே! ப்ரசண்டலி- எங்கும் ப்ரசண்டமானவளே! காரி காரியரூபியே! அகாரி உகாரி-அகார உகாரவடிவமானவளே! சடாக்கரி-ஆறெழுத்தானவளே! மாவிண்டலியே! ஆண்பெண்—ஆணும்பெண்ணுமான, இரண்டு உருவாய்நின்ற, இரண்டுவடிவங்களுந்தானேயாய் நின்றவளான! மின் ஒளியே- மின்னல்போலும் வடிவத்தையுடையவளே! (எ-று.)

நீ என்னைக்காக்கவேண்டும் என்பது குறிப்பு. (57)

மின்ஞெளியாயண்டபிண்டசராசரம்விண்ணுமண்ணுந்
தன்ஞெளியானசடாக்கரிசாம்பசதாசிவமென்
றன்ஞெளியீஸ்வான்ருத்திரன்மாலயனேதரிதா
மன்ஞெளியைவர்க்குமாதாவுந்தையலுமானவளே.

(இ-ள்,) மின் ஒளியாய்-மின்னலைப்போலும் ஒளியுள்ளதாய், அண்டம் பிண்டம் அண்டத்திலும் பிண்டத்திலும், சராசரம்-சராசரங்களிலும், விண்ணும் மண்ணும்-ஆகாயத்திலும், பூமியிலும், ஆகிய இவற்றிலெல்லாம், தன் ஒளியானசடாக்கரி-தன் ஒளியேயாய் வழங்கிவருகின்ற சடாக்கரியே! சாம்பசதாசிவம், ஈஸ்வரன் ருத்திரன்மால் அயன்-என்று சொல்லப்பட்ட பஞ்சகர்த்தர்களுக்கும், தன் ஞெளி ஓத அரிது ஆம்-உன்னுடைய ஒளியே ஓதுதற்கு அரிதாகிய மன்ஒளி-நிலைபெற்ற ஒளியாம், ஐவர்க்கும் மாதாவும் தையலும் ஆனவளே ஆகையால் ஐவர்க்கும் தாயும் தையலும் ஆனவளும் நீயே யாவாய். (எ-று.)

மாதாபிதாகுருதெய்வம்பெறுதவமற்றுமுள்ள
தாதாவலியிட்டகாமியமோதுசடாக்கரமென்
றுதாரமென்றனுடற்பொருளாவியருட்பலனின்
பாதாரவிந்தமுந்தந்தென்னைக்காக்கும்பராசத்தியே.

(இ-ள்.) மாதா பிதா குருதெய்வம் பெறுதவம்-தாய் தந்தை குரு, தெய்வம், மகத்தானதவமும், மற்றும் உள்ளதாதா-மற்றுமுண்டானதாதாவும், வலியிட்ட காமியம்-பலம்பொருந்திய காமியமும், ஓதும் சடாக்கரம்-சொல்லுகின்ற சடாக்கரமும், என்று-என்று சொல்லப்பட்ட, ஆதாரம்-ஆதாரமும், என்தன்-என்னுடைய, உடல்பொருள் ஆவி-உடல், பொருள், ஆவியாகிய மூன்றும், அருள் பலன்-திருவருட்பலனல் நீ பெறவேண்டிய வைகளாம், நின்பாதாரவிந்தமும் தந்து-உன்னுடைய திருவடித்தாமரைகளையுந்தந்து, என்னைகாக்கும் பாரசத்தியே-என்னைக்காப்பாற்றுகின்ற பராசத்தியே! (எ-று.)

நீயே எனைக்காக்கவேண்டும் என்பது குறிப்பு. 59

பராசத்தியுத்தமிபாசாங்குசத்திபரஞ்சுடர்மா
நிராசத்திநீறணிபூரணிகாரணிநின்மலியாம்
வராசத்தியாதிவடுகாயியட்டவயிரவிநந்
தராசத்திருத்ரிசடாக்கரிநிட்களத்தாண்டவியே.

(இ-ள்.) பராசத்தி-பராசத்தியே! உத்தமி-உயர்ந்தவளே! பாசாங்குசத்தி-பாசாங்குசத்தையுடையவளே! பரஞ்சுடர் - மேலான தேஜோமயமானவளே! மா-பெருமை பொருந்திய, நிராசத்தி-மிக்கசத்தியுள்ள, நீறு அணி-பஸ்மோத்தாரணஞ் செய்து கொள்கிற, பூரணி-எங்குங் நிறைந்தவளே! காரணி-எல்லாவற்றிற்கும் யாவருக்கும் முதலானவளே! நின்மலி ஆம்வார சத்தி பரிசுத்தமுடையவளாகிய வாத்தைத்தருகின்ற சத்தியே! ஆதி-ஆதி சத்தியே! வடுக ஆயி-வடுகியே! வயிரவி-பயிரவியே! நம்-நம்முடைய, தராசத்தி-தரையையும்

தரையிலுள்ள சராசரங்களையும் ஈன்ற சத்தியுள்ளவளே! ருத்ரி—உருத்திரியே! சடாக்கரி—ஆறெழுத்துக்குரியவளே! நிட்களம் தாண்டவியே-பரிசுத்தமான தாண்டவம் புரிபவளே! (எ-று.) (60)

தாண்டவிகோரிமகிடாசுரன்சிரந்தட்டழியத்
தீண்டவிபாசுபாராக்ரமசூலிநற்சீறரவம்
பூண்டவிராகிநிராகிபொன்னம்மையென்புன்மையறுத்
தாண்டவிபஞ்சசபைவல்லியாறெழுத்தாநந்தியே.

(இ-ள்.) தாண்டவி-கூத்தாடுகின்றவளே! கோரி - கோரிக்கையை நிறைவேற்றுபவளே! மகிடாசுரன் சிரம்-மகிடாசுரன் தலையை, தட்டு அழிய தீண்டவிபாசுபாராக்ரமசூலி-தட்டுக்கெட்டழியும் படி விட்டசூலாயுதத்தை யுடையவளே! நல்-உயர்ந்த, சீறு அரவம்-சீறுகின்றபாம்பை, பூண்ட - ஆபரணமாகத்தரித்த, இராகி-இசையுடையவளே! நிராகி-சரீரமற்றவளே! பொன் அம்மை-பொன் போலும் விளங்குபவளே; என் புன்மை-என்னுடைய அற்பச் செயல்களை, அறுத்து-போக்கி, ஆண்ட-அடிமைகொண்ட, விபஞ்சசபை வல்லி-உயர்ந்த அவைக்களத்தின்கண் எழுந்தருளிய வல்லிபோல் பவளே! ஆறு எழுத்து ஆநந்தியே-ஆறெழுத்துகளில் ஆநந்தங் கொண்டவளே! (எ-று.) ()

ஆநந்தியம்பையமைபுவனாயியகாரசத்தி
தாநந்திகலாதிவடவாகினிமாசிவசம்புபர
மாநந்தபேதநமாமயரூபினியாதிகமழ்
தேநந்திபூங்குழல்வாலைபுவனைதிரிபுரையே.

(இ-ள்.) ஆநந்தி - ஆநந்தரூபத்தையுடையவளே! அம்பை - அம்பையே, அம்மை-தாயே, புவன ஆயி-பதினான்குலகங்களுக்குந்தாயே, அகாரசத்தி-அகாரமென்னும் மந்திராட்சரவன்மையையுடையாளே! தாம் - தாவுகின்ற, நமது-நம்முடைய, அ-அந்த, கலா ஆதி—கலைமுதலியதத்துவங்களுக்கு முதல்வியே, வாகினி-வெற்றியுள்ளவளே, இமம்-பனிமலையிற்பிறந்த, சிவசம்பு-பரமேஸ்வரனுக்கு, பரம ஆநந்தி-மிக்க ஆநந்தத்தைக் கொடுப்பவளே, பேதம்-இரண்டாயுள்ளவளே, நமாமயரூபினி - நமஸ்காரமயமான வடிவுள்ளவளே! ஆதி-தலையாயவளே! தே-தெய்வத்தன்மை பொருந்திய மணத்தை, கமழ்-வீசுகின்ற, நந்திபூ-நந்தியாவட்டப் பூவையணிந்த, குழல்-கூந்தலையுடைய, வாலை - வாலாம்பிகையே, புவனை - புவனாம்பிகையே, திரிபுரையே - திரிபுரையே. (எ-று.)

பிறந்த என்பது பரமானந்தி என்பதைக் கொண்டது, இது இறைவியை வியந்தது. இதுபோற்சில செய்யுட்கள் உள என அறிக. (62)

திரிபுரையாறெழுத்தாங்காரிநங்கலிசிந்தவறுத்
தெரிபுரையம்பிகைவம்பரைவேற்கொண்டெறிந்துயிரைப்
பரிபுரையென்னுளமேகோயிலென்பற்றுன்பாயலுமாய்
மரிபுரையென்னகநின்னகமாக்கொண்டமாதங்கியே.

(இ-ள்.) திரிபுரை-திரிபுரையே, ஆறு எழுத்து ஆங்காரி—ஆறெழுத்ததிகார முடையவளே, நம்கலி நம்முடைய வருத்தமானது, சிந்த-அற்றுப்போம்படி, அறுத்து எரி-வெட்டியெரிக்கின்ற, புரை - இறைவனையொத்த, அம்பிகை-அம்பிகையே, வம்பரை - கொடியவர்களை, வேல்கொண்டு எறிந்து-வேலால் வீசி, உயிரைபரி-ஆன்மாக்களைத் தாங்குவாய், என் உளமே கோயில்-என்னுடைய மனதையே இருப்பிடமாகவும், என்பற்று உன்பாயலும் ஆய்—என்னுடைய அன்பையே அறையிலிடுபாயாகவும் கொண்டு, மரிபுரை-சாதலையொத்தடங்கியிருக்கின்ற, என் அகம்-என்னுடைய மனத்தையே, நின் அகம் ஆக கொண்ட மாதங்கியே-உன்னுடைய இருப்பிடமாகக் கொண்ட மதங்கியே. (எ-று.) (63)

மாதங்கியன்பர்பிறவிக்கடலைவடவனலாய்க்
கோதங்கிமுன்னைவினையையுங்கூற்றையுங்கோதியுள்ளத்
தேதங்கிநின்றுவிளையாடுபெண்பிள்ளையென்செவிக்கே
போதங்கிலீமையும்யவ்வுமொன்றாகியபூரணமே.

(இ-ள்.) மாதங்கி - மாதங்கியே, பெண்பிள்ளை - பெண்பிள்ளை வடிவுபோன்ற வடிவையுடையவளே, என்செவிக்கு - என்னுடைய காதின்கண், போது-புகுந்த, அங்-அங்கும், கிலீ, கிலீம், ஐயும்-ஐயும், யவ்வும்-யவ்வும், ஆகிய மந்திர பீஜாட்சரங்களெல்லாம், ஒன்றாகிய-தான் ஒரு வடிவினளேயாயமர்ந்த பூரணமே-எங்கு நிறைந்தவளே! அன்பர்-அடியார்களது, பிறவிக்கடலை-பிறப்பென்கிற காட்டுக்கு, வடவனல் ஆய்-வடவாமுகாக்கினிபோல்வதாய், கோது-திரண்ட, அங்கி-அக்கினிமயமானவளே, முன்னை-முற்பிறப்பிற்செய்த, வினையையும்—இரு வினைகளையும், கூற்றையும்-எமனையும், கோதி-மாய்த்து, உள்ளத்து தங்கி-என்மனத்தின்கண்குடியிருந்து, நின்று-அவ்விடத்தை விட்டு நீங்காமல் நின்று, விளையாடு-ஆநந்தக் கூத்தாடுவாய். (எ-று.)

இறைவியே நீ என்னுடைய மனத்தின் கண் குடியிருந்து பிறவியையும் எமனையும் போக்க வேண்டும் என்பது கருத்து. (64)

பூரணம்வையெனப்போக்கும்பிறப்பைப்புணர்கிலியுங்
காரணநின்னருட்காட்டிடுஞ்சவ்வெனக்கன்னிகைநின்
னாரணதற்சொருபம்மனவாக்குவையாறெழுத்தி
னாரணனான்முகனைம்முகனாய்நின்றநாயகியே.

(இ-ள்.) ஆறு எழுத்தின்-சடாக்கரமென்னும் ஆறெழுத்துகளின் ஆதாவினால், நாரணன்-நாராயணனாகவும், நான்முகன்-நான்கு முகங்களையுடைய பிரம தேவனாகவும், ஐம்முகனாய்-ஐந்து முகங்களையுடைய ருத்திரமூர்த்தியாகவும், நின்ற-வடிவங்கொண்ட, நாயகியே-அம்பிகையே! பூரணம்வை என-என்னைப் பரிபூரணநிலையில் வைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, பிறப்பை-பிறவியை, போக்கும்-நீக்குந்தன்மையுள்ள, புணர்-சேர்ந்த, கிலியும்-கிலியும் என்னும் மந்திர பீஜாக்கரங்களையும், நின் அருள்-உன்னுடைய திரு

வருளை, காட்டிடும்-விளக்கிக்காட்டுகின்ற, காரணம் - ஏதுவையுடைய, சவ்வென-சவ்வென்னும் மந்திர பீஜாக்கரங்களையும், கொண்டவடி வினளாகிய, கன்னிகை-கன்னிப்பருவமுள்ள பெண்ணே! நின்-உன்னுடைய, ஆரணம்-வேதத்தின், தன் சொருபமனவாக்கு ஆக்குவை-வடிவத்தை என்மனவாக்குகளிலாக்குகுவாயாக. (எ-று.)

எல்லாம் வல்ல இறைவிசர்வ ஆன்மாக்களை ஈன்றும் கன்னிகை யாகவேயிருக்கின்றுளாகலின், 'கன்னிகை' என்றூர்.

இதனை;

" பூரணிபுராதனிசுமங்கலைசுதந்தரி
புராந்தகித்ரியம்பகியெழிற்
புங்கவிவிளங்குசிவசங்கரிசஹஸ்ரதள
புஷ்பமிசைவீற்றிருக்கு
நாரணிமனுதீதநாயகிகுணுதீத
நாதாந்தசத்தியென்றுன்
நாமமேயுச்சரித்திடுமடியர்நாமமே
நானுச்சரிக்கவசமோ
வாரணிசடைக்கடவுளாரணியெனப்புகழ
வகிலாண்டகோடியீன்ற
வன்னையேபின்னையுங்கன்னியெனமறைபேசு
மானந்தரூபமயிலே
வாரணியுமிருகொங்கைமாதர்மகிழ்கங்கைபுகழ்
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெணுமையே." என்பதாலறிக. (65)

நாயகிநின்னன்பர்பாதத்தையர்ச்சிக்கும்நற்கடம்பந்
தோயகிலாரமுஞ்சாந்தமுங்கொன்றைத்தொடையலுநின்
சேயகிலாண்டமென்றேத்தியவாதிதிருமுடிக்கே
யாயகிலாண்டமுந்தேக்குநின்னுறெழுத்தக்கரியே.

(இ-ள்.) நாயகி-தலைவியே, நின் அன்பர்பாதத்தை—உன்னுடைய அடியார்கள் உன்னுடைய திருவடிகளை, அர்ச்சிக்கும்-அர்ச்சனைசெய்கின்ற, நல் கடம்பம்-உயர்ந்த கடப்பமலர்மாலையும், தோய்-பிடிக்கப்படுகின்ற, அகில்-அகிலும், சாந்தமும்-சந்தனமுங் கலந்த கலவைச் சாந்தும், கொன்றை தொடையலும்-கொன்றைப் பூமாலையும், நின்று-இருந்து, (அதனுல்) அகிலாண்டம் என்று ஏத்து இயல்-அகிலாண்டம் என்னுந் திருப்போல் துதிசெய்யப்படுகின்ற, இயல் பிணையுடையவளே! ஆதிதிருமுடிக்கே ஆய்-பரமேஸ்வரனுடைய திருமுடியையே ஆராய்ந்து தேடுகின்ற, அகில அண்டமும் தேக்கும்-சர்வ அண்டங்களிலு முள்ள ஆன்மகோடிகளெல்லாம் தெவிட்டெடுக்கின்ற, முன்-

யாவராலுந் தியானிக்கப்படுகின்ற, அரி ஓம் அக்கரியே-அரி ஓம் என்னும் எழுத்தின்வடிவினையுடையவளே! (எ-று.)

இங்ஙனமாயதன்மையுடையவள் நீயாகையால் நீயே என்னையுங் காத்து இரக்ஷிக்கவேண்டியவள் என்பது குறிப்பெச்சம். (66)

ஹரிஓம்நமோத்துசிந்தம்மகாம்முதலவ்வவவுந்
தெரிவானமந்திரமோராறெழுத்துநின்சித்தில்பல
விரிவாகியவண்டபிண்டசராசரம்வேதமெவ்வும்
வரியானதுங்கண்டதவ்வுஞ்சிவாயவசியென்பதே.

(இ-ள்.) அரி ஓம் நமோத்து சிந்தம் அகரம் முதல் அவ்வவவும்-மேலே சொன்ன மந்திர எழுத்துகள் முதல்யாவும், தெரிவான-யாவரு முணர்கின்ற, மந்திரம்-மந்திரமான, ஓர் ஆறு எழுத்தும்-ஒப்பற்ற சடாக்ஷரமும், நின் சித்தில்-உன்னுடைய வன்மையினுல், பல விரிவாகிய-பலபேதமான, அண்டபிண்டம்-வெளியுலகமும், உள்ளுலகமும், சராசரம்-அசையும் பொருள் அசையாப்பொருள்களும், வேதம்—வேதத்தின் உண்மையும், வரியானதும்-வரிந்து கொள்ளக் கூடியபொருள்களும், கண்டது-உண்மைப் பொருளிது வென்றுணரப்பட்டது, அவ்வும் சிவாயவசி என்பதே-ஓம், அவ்வும் சிவாயவசி என்று சொல்லப்படுகின்ற மந்திராக்ஷரங்களேயாம். (எ-று.)

எல்லாம் பிரணவபஞ்சாட்சரங்களாலேயே நடக்கின்றதென்பதை உணர்த்துகின்றது. (67)

அவ்வுஞ்சிவாயவசியவென்னுமந்திரமஞ்சுடன்மூன்
றெவ்வுஞ்சடாக்காமும்மண்டலத்தினுமொட்டவுடன்
கௌவுஞ்சிவஞ்சத்தியச்சத்தியாவியைக்காக்குமவ்வுஞ்
சவ்வுஞ்சிவசிவவென்பாரிருவினைதானறுமே.

(இ-ள்.) அவ்வும் சிவயவசி என்னும்-ஓம், அவ்வும் சிவயவசி என்று சொல்லப்படுகின்ற, மந்திரம் அஞ்சுடன்-பஞ்சாக்கரங்களுடன், மூன்று ஒவ்வும்-மூன்று அக்கரங்களும் உட்கிடையாச் சேர்ந்திருக்கிற, சடாக்கரம்-ஆறெழுத்தானது, மும்மண்டலத்தினும் ஒட்ட-சோம, சூர்ய, அக்கினி என்னும் மூன்று மண்டலங்களிலுஞ்சேர்ந்ததால், உடன்-உடனே, சிவசத்தி கௌவும்-சத்திநிபாதம் உண்டாகும், அசத்தி ஆவியைக் காக்கும்-அந்தச் சிவசத்தியே சர்வலோகங்களிலு மிருக்கின்ற ஜீவான் மாக்களைக் காத்திரக்ஷிக்கும், மவ்வும் சவ்வும் சிவ சிவா என்பார் இருவினை தான் அறும்-மேற்படி மந்திராக்கரத்தை உச்சரிப்பவர்களுடைய நல்வினை, தீவினைகள் தாமே கட்டு விட்டொழியும். (எ-று.)

எல்லா மந்திரங்களுக்கும் மேலான சடாக்கரதியானஞ் செய்பவர்களுக்கு எல்லா நன்மைகளும் கை கூடும் என்றவாறு. (68

அறுமாம்பசுவென்னையையன்குருவந்தானடைந்தோர்
மறுமாதர்கர்ப்பஞ்சிசுநசித்தோர்கள்வதைபலவுஞ்
செறுமாம்பகுதிசிவத்துவத்தீயையுந்தின்னுநினைப்
பெறுமாதவர்க்கெழுத்தாறுங்குடிலைப்பெருநெருப்பே.

(இ-ள்.) ஓர் ஐயன்-ஒப்பற்றதலைவனுன, குரு-ஆசாரியனுனவன், வந்து அடைந்தான்-வந்து சேர்ந்தான், என்னை பசு அறும்-(ஆகையால்) என்னைச் சேர்ந்திருக்கின்ற பசுத்துவமான மாய்கையானது நீங்கும், மறுமாதர்-வேறு மனைவிமார், கர்ப்பம்-கரு, சிசு-குழந்தை இவைகளை, நசித்தோர்-கெடுத்தவர்களாகிய இவர்களுடைய,வதைபலவும்-கெடுதிகள் பலவும், செறுமாம் - ஒழியும்,பகுதி-உயர்ந்தபிரிவினையாகிய, சிவத்துவம் தீ-சிவபாவனையான நெருப்பு, ஐயம் தின்னும் நினைப்பு-சந்தேகத்திற்குள் இறக்குகின்ற எண்ணத்தால், நின்னைப்பெறும் மாதவர்க்கு-உன்னை உள்ளபடியே வழங்குகின்ற மகத்தாந் தவத்தினர்க்கு, ஆறுஎழுத்தும்-சடாக்கரங்களும், குடிலைப் பெரு நெருப்பே-மூலாதாரமான பெரிய நெருப்புப்போல்வதாம். (எ-று.) (69)

நெருப்புநெருப்புபிரணவபெண்ணுந்தனெஞ்சவஞ்சர்க்
கிருப்புநெருப்புக்கபாடநின்னிடர்க்கிரவிவெண்ணெய்க்
கருப்புநெருப்புறைகாணுர்மெய்க்கண்டகனிகயிலைப்
பொருப்புநெருப்புவிருப்புறுஞானப்பொறிக்கொழுந்தே.

(இ-ள்.) தன் நெஞ்சவஞ்சர்க்கு-தன் நெஞ்சில் வஞ்சக முடையவர்களுக்கு, பிரணவப்பெண்ணும்-பிரணவமாகிய குடிலாசத்தியும், நெருப்பு நெருப்பு-வன்மையான நெருப்புப் போன்றவளாவாள், நின் இடர்க்கு-உன்னுடைய துன்பங்களுக்கு, இருப்பு நெருப்புக்கபாடம்-இரும்பாலாகிய நெருப்பினுற் செய்யப்பட்ட கதவாகும், வெண்ணெய்க்குஇரவி-வெண்ணெய்க்கு சூரியோஷ்ணம்போல்வதாம், அருப்பு நெருப்பு உறைகாணுர்-அரும் பாகிய நெருப்புத் தன்மை போன்ற, இருப்பிடத்தைக் காணுதவர்கள், கண்ட-பார்த்துணர்ந்த, மெய்க்கனி-உண்மைப்பழமானது வீற்றிருக்கின்ற, கயிலைப்பொருப்பு-கயிலாயமலையின்கண், நெருப்பு-நெருப்பைப் போன்றதேஜேமயமாய் எழுந்தருளியிருக்கின்ற பரமேஸ்வரனிடத்தில், விருப்பமும்-விருப்பமுள்ள பொருளும், ஞானப்பொறிக் கொழுந்தே-ஞானமாய பொறிகளாகவுண்டான கொழுந்தான சிவ சுப்பிரமணியக் கடவுளே யாவார். (எ-று.) (70

கொழுந்தேமரகதக்குன்றேயிரத்நக்கொடிமுடிபூத்
தெழுந்தேபிரகாசிப்பையீரேழுலகெண்டிசைபுவனந்
தொழுந்தேவருந்தொழில்பேதம்பலவெழுதோற்றத்தெம்மை
யழுந்தாமுன்பெற்றெடுத்தாளரியோமெழுத்தக்கரியே.

(இ-ள்.) கொழுந்தே-கொழுந்து போல் பவளே! மாகதக்குன்றே-பச்சை மலை போல்பவளே! இரத்ன கொடி-இரத்தினக் கொடியின், முடி-உச்சி

யின் கண், பூத்து-மலர்ந்து, எழுந்து-கிளம்பி, ப்ரகாசிப்பை-விளங்குவாய், ஈர் எழு உலகு-பதினான்குலகத்திலுள்ளவர்களும், எண்திசை-அஷ்டதிக்கு வாசிகளும், அல்லது திக்குப்பாலர்களும், புவனம்-இருநூற்றிருபத்து நான்கு புவனங்களிலுள்ளவர்களும், தொழும் தேவரும்-தொழுதுவணங்குகின்ற தேவர்களும், தொழில்-அவ்வவர்களுடைய தொழில்களும், பல எழுவேதம்-பலவாக உண்டானவேதங்களின் சொல்லப்பட்ட, எழு தோற்றத்து-எழு வகைப்பிறப்பிறப்புகளில், அழுந்தாமுன்-நாங்கள் அழுந்திப்போகாத முன்னரே, எம்மை எடுத்து ஆள்-எங்களைக்கைலாகு கொடுத்தெடுத்து ஆளவெண்டும், அரி ஓம் எழுத்து அக்கரியே-அரிஓம் என்னும் எழுத்து வடிவமாயுள்ளவளே. (எ-று.)

ஹரிஓமரகரவவ்வுஞ்சிவாயங்கியங்கிசமாங்
கிரிஓமையுங்கிலியுஞ்சவ்வுஞ்சவ்வுங்கிலியுமையு
மரிஓஞ்சொருபவருட்செயம்ரீம்ரீயுஞ்சிரியும்
திரிஓங்கிலியுஞ்சரஹணவாயிசிவகுருவே.

(இ-ள்.) அரிஓம் அரகர வவ்வவ்வும்-இவ்வெழுத்துகளெல்லாம், சிவாய அங்கிசமாம்-சிவபெருமானது அம்சமாகும், கிரி ஓம் ஐயும் கிலியும் சவ்வும், சவ்வும் கிலியும் ஐயும்-இந்த மந்திராக்ஷரங்களும், அரி ஓம் சொரூப அருள் செயம்-மேலான உண்மைப்பொருளின் வடிவமான அரிஓம் என்னும் பீஜாட்சரங்களும், ரீயும் ரீயும் சிரியும்-இவைகளும், திரி ஓம் கிலியும்-இவ்வெழுத்துகளும், சரஹணவாயி-(வடிவமாயமர்ந்தவளான) சரவணத்தியே! சிவகுருவே-சிவாம்சமான குருவே! (எ-று.) (72)

குருவாந்திரிபுரபவநமவாயிகுமாரிமகா
திருவாந்திகழொளியவ்வவ்வுமானசிவக்கடலே
மருவாம்பரிபுரபவசிவமாநந்தவாரிபெருங்
கருவாஞ்செயலொழிபவநமவாயிகயற்கண்ணியே.

(இ-ள்.) குரு ஆம்-ஆசாரியவடிவினளான, திரிபுரபவநம் ஆயி-திரிபுரபவன் என்னும் எம்முடையதாயே! குமாரி-கன்னிகையே! மகாதிரு ஆம்-மிக்கஅழகினையுடையவளான, திகழ் ஒளி விளங்கும்-ஒளி மயமான, பவ்வவ்வும் ஆனசிவக்கடலே-பவ், வவ் என்னும் அட்சரங்களின் வடிவினளான சிவவடிவினளே! மருவாம்-மணமுள்ளவளான, பரிபுர-சதங்கையை யணிந்த, பதம்-திருவடிகளையுடைய, சிவானந்தவாரி-சிவமாம் பேரின்பக் கடலே! பெருங் கரு ஆம் செயல்-பெரியபிறப்பென்கிற செய்கையினின்றும் இயற்கையாகவே நீங்கினவளே! நமாயி-நமஸ்கார ரூபிணியே! கயற் கண்ணியே-அங்கயற்கண்ணித்தாயே. (எ-று.)

இங்ஙனமாய இறைவி யென்னையும் பாது காக்கவேண்டும் என்பது கருத்து. (73)

கண்ணியெனுஞ்சரஹணபவதேவிகமலனரி
நண்ணார்புரமெரித்தோன்மூவரைப்பெற்றநயகியே
பெண்ணீரவர்க்குமம்மாவென்றுநின்றபெருஞ்சுடரே
அண்ணீரெழுத்திற்குந்தாயாகிவந்தவரும்பொருளே.

(இ-ள்.) கண்ணி என்னும்-அங்கயற்கண்ணி என்று சொல்லப்படுகின்ற, சரஹணபவதேவி-ஆறெழுத்துகளின்தேவியே! கமலன்அரி நண்ணார்புரம் எரித்தோன்-பிரமதேவன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய, மூவரைப்பெற்றநாயகியே-மும்மூர்த்திகளையும் பெற்றெடுத்த தலைவியே! பெண்ணீர்-உனது பெண் தன்மையால், அவர்க்கும் அம்மா என்று நின்ற-அம்மூவர்க்கும் தாய் என்று சொல்லும்படி யிருந்த, பெருஞ்சுடரே-மிக்கதேஜோமய ரூபமுள்ளவளே! அண்ணீர் எழுத்திற்கும் தாய் ஆகிவந்த அரும் பொருளே-பொருந்தினகுளிர்ச்சியையுடைய எல்லா எழுத்துகளுக்குந்தாயாயிருந்த அரும்பொருள் வடிவமே. (எ-று.)

'பெண்ணீரவர்க்கும் அம்மா என்று நின்ற' என்பதற்குப் பெண் தன்மையுள்ள உலகப் பெண்களுக் கெல்லாம் தாய் என்று சொல்லும்படி யிருந்த என்னலு மொன்று. (74)

அஆஇஈஉஊஎஏஒஓவெனுமைந்தெழுத்தி
இஈஓஒஔநமநாராயணவென்றெட்டெழுத்தி
உஊஎஏஓஒஔவென்பவாமைம்பத்தோரெழுத்தி
எஏஒஓஔவும்மௌவுமதாய்நின்றதம்பிகையே.

(இ-ள்.) அஆஇஈஉஊஎஏஒஓ என்னும் ஐந்து எழுத்தி-குற்றெழுத்துகள் ஐந்திற்குந்தலைவியே! இஈஓஒஔ நமநாராயண என்ற எட்டெழுத்தி-அஷ்டாக்ஷரங்களுக்குந்தலைவியே, உஊஓஒஔ என்பவாம் ஐம்பத்து ஓர் எழுத்தி-ஐம்பத்தோரெழுத்துகளுக்குந் தலைவியே! எஏஒஓஔவும்மௌவுமதாய் நின்ற அம்பிகையே- இந்த எழுத்துகளாகவும் இருந்த அம்பிகையே! (எ-று.)

இங்ஙனமாய வன்மையுள்ள நீ என்னையுங் காக்கவேண்டும் என்பது கருத்து. (75)

அவ்வுமுவ்வுமமோவ்வுமவ்வொடுநீங்கொடையுங்கிலியுஞ்
சவ்வும்பரைசிவமங்குங்கொங்கென்றசத்தம்மிரண்டு
மௌவுஞ்சரவணபவவென்றஞானத்தொருவனரு
ளெவ்வுமறிகவிரண்டையுந்தாங்கிநின்றேரெழுதமே.

(இ-ள்.) அவ்வும் உவ்வும் ஒவ்வும் மவ்வொடும் நீங்ஒடு ஐயும் கிலியும்-இம்மந்திராக்ஷரங்களின் வடிவுள்ளவளான பாரசத்தியும், மங்குகொங்கு ஔவும் சரவண அவன் என்ற சிவம்-இம்மந்திராக்ஷரங்களின்வடிவுள்ளவனான சிவனும், சத்தம் இரண்டும்-ஆகிய இரண்டு ஒலிகளும், ஞானத்து ஒருவனும்

அருளும் ஒவ்வும் ஞானதிபஞன பரமேஸ்வரனும் திருவருட்சத்தியும் பதியு மிடமாம், கூறு இரண்டையும் தாக்கி நின்றது ஒருஎழுத்தே - ஆகையால் மேற்சொல்லப்பட்ட இரண்டையும்மோதி நின்றது ஒரு எழுத்தே யென்று, அறிக-தெரிந்து கொள்ளக்கடவர். (76)

அரிக்குமுதற்பொருளெப்பொருளும்மண்டபிண்டமுமங்
குரிக்குஞ்சடாக்கரத்தோசையைப்பற்றுங்குணமறிந்துச்
சரிக்குந்தொழும்பர்க்குளாதாரமாறுந்தகருமிருண்
மரிக்கும்பரவெளியாகுநின்பாதம்வழிப்படுமே.

(இ-ள்.) அரிக்கு-விஷ்ணுவுக்கு, முதற்பொருள்-முன்னே உள்ளபொருளும், எப்பொருளும்-எவ்விதமான பொருள்களும், அண்டம் பிண்டமும்-உள்ளும் வெளியும், குறிக்கும்-யாவரும் எண்ணுகின்ற, சடாக்கரத்து ஓசையை-ஆறெழுத்துகளினொலியை, பற்றுங்குணம் அறிந்தும்-பிடித்துக்கொண்டிருக்கிற தன்மையையுணர்ந்து, உச்சரிக்கும் தொழும்பர்க்குள்-துதிசெய்கின்ற அடியார்க்குள், ஆதாரம் ஆறிலும்-ஆறுதாரங்களிலும், தங்கும்-இருக்கின்ற, இருள்மரிக்கும்-அஞ்ஞானமொழிக்கின்ற, வழிப்படுநின் பதம்-யாவராலும் வணங்கப்படுகின்ற உன்னுடைய திருவடி, பரவெளியாகும்-உயர்ந்த ஞானகாயமாகும். (எ-று.) (77)

வழிப்படுவாசலில்வாசியுள்வாசலில்வாங்கியப்பாற்
சுழிப்படுமாறெழுத்தங்கியைக்கோத்துச்சுழிக்கவல்லா
ரழிப்படுந்தன்றலைமேலயன்கையெழுத்தஞ்செழுத்துங்
கழிப்படும்பின்பெமனோலையலதில்லைகனவினுமே.

(இ-ள்.) வழிபடும் வாசலில்-யாவராலும் வழிப்படப் படுகின்றவாசலிலே யிருந்து, உள்வாசலில்-உள் இடத்திற்கு, வாசிவாங்கி—வாசியைப் பூரகஞ் செய்து, அப்பால்-அதன்பிறகு, சுழிப்படும்-பிரணவத்தோடு கலந்திருக்கிற, ஆறுஎழுத்து அங்கியை கோத்து-சடாக்கரங்களாகிய நெருப்பை அதில்மாட்டி, சுழிக்கவல்லார்தம்-சும்பிக்க வல்லவருடைய, தலை-தலையில் எழுதப்பட்டுள்ள, மாலயன் கையெழுத்து-மிக்க பிரதேவன்கையெழுத்தான, அஞ்சு எழுத்தும்-எல்லாரும் அஞ்சக்கூடிய எழுத்தும், அழிபடும்-அழிக்கப்படும், பின்-பின்னர், எமன் ஓலையது கனவிலும் இல்லை-எமனுடைய ஓலையானது கனவிலும் உண்டாயிருப்பதாக எண்ண வேண்டியதேயில்லை, கழிபடும்-கழிந்து போம். (எ-று.) (78)

கனமானமாயமிக்காயம்விட்டாவிகடகருமுன்னே
மனமானபாவியைத்தன்வசமாக்கிவசியெனுமுற்
பனமானவேணியிலாறெழுத்தேற்றிநின்பாததரி
சனமானயோகியழியாரெக்காலமுஞ்சத்தியமே.

(இ-ள்.) கனமான-மிக்க, மாயம்-மாய்கையாகிய, இகாயம் விட்டு-இவ்வுடம்பைவிட்டு, ஆவி-உயிரானது, கடக்கும் முன்னே-வெளிப்படுவதற்கு முன்னரே, மனமானபாவியை மனம் என்கிற மிக்க கொடியவனை, தம் வசம் ஆக்கி-தங்களிஷ்டப்படி நடக்கு மாறு செய்துகொண்டு, வசியெனும்-வசியென்று சொல்லப்படுகின்ற, உற்பனமான-உயர்ந்த, ஏணியில்-ஏணியிலே, ஆறு எழுத்து ஏற்றி-ஆறு எழுத்துகளை ஏற்றி, நின்-உன்னுடைய, பாதம்-திருவடிகளை, தரிசனம் ஆன-தரிசித்துக்கொண்ட, யோகி-யோகிகள், எக்காலமும் அழியார்-எந்தக்காலத்திலும்அழியமாட்டார், சத்தியம்-இதுஉண்மை. (எ-று)

சத்தியமூலத்திரவியையூன்றிச்சரநிலைமேற்
பற்றியதீயிற்சகத்திரத்தெல்லையும்பாழ்படுத்தி
முற்றியசந்திரகலையூடுருவிமுடிவிலுன்னை
யத்தியசீவன்சிவமாகக்காட்டுநின்னாறெழுத்தே.

(இ-ள்.) சத்தியம்-சத்தியமாக, மூலத்து - மூலாதாரத்தில், இரவியை ஊன்றி-சூரியகலையை அழுத்தி, சரநிலைமேற் பற்றிய சரநிலையின் மேலேயிருந்த, தீயின்-தீயினால், சகத்திரத்து எல்லையும்-எல்லா இடங்களையும், பாழ்படுத்தி-கெடுத்து, முற்றிய-முதிர்ந்த. சந்த்ரகலை ஊடுருவி-சந்திரகலைமேற் சென்று, முடிவில்-தீர்மானத்தில், உன்னை-உன்னை, அத்திய-உள்ளவனாகக் கண்ட, சீவன்-ஆத்மாவை, நின் ஆறுஎழுத்து-உன்மயயான சடாக்ஷரங்கள், சிவம் ஆகக்காட்டும் சிவமென்னும் படி தோற்றுவிக்கும். (எ று.) (80)

இங்ஙனமே ஸ்ரீசிதம்பர சுவாமிகளும் தாமிசைத்தசந்நிதிமுறையில்,

“ மூலநிலத்திலதோ முகமாய்
முகிழ்த்து விழியின்பொடுலுயிலும்
மூரிப்பாம்பைக் காலனலை
மூட்டியெழுப்பி நிலமாறுஞ்
சீலமொடும் போய்த்தரிசித்துச்
செழுமாமதியினமுத கடல்
தேக்கியகத்தங்கசைவறு மோர்
தெய்வத்தவத்தோருள விழியிற்
காலுந் தீப மினல் பந்தங்
கடிகூர் விறிசுகதிர்மதிபோற்
காட்டுமொளியாயிவையாவும்
கடந்தாங்கழிவில் பேரொளியாய்ச்
சாலவிளங்கும் விந்துவெனுந்
தடமாமயிலோய்தாலேலோ
தமரக்கடலைக்கடந்தமுதந்
தருவோன்மருகாதாலேலோ” எனக் கூறியுள்ளமையானறிக. ()

ஆறெழுத்தானநின்னானந்தமைம்பத்தோரக்கரத்திற்
கீறெழுத்தோரெழுத்தைந்தெழுத்தீரெழுத்தேத்திவல
மாறெழுத்தங்கிவடிவாய்க்கடாசலவாசல்புகுந்
தூறெழுத்துண்ணமிர்தஞ்சிவயோகிக்கிதுற்பனமே.

(இ-ள்.) ஆறெழுத்து ஆனநின் ஆனந்தம்-சடாக் கரத்தாலுண்டான உன்னுடைய பேரின்பமானது, ஐம்பத்தோர் அக்கரத்திற்கு-ஐம்பத்தோரெழுத்துகளுக்கும். ஈறுஎழுத்து-முடிவான எழுத்தான, ஓர்எழுத்து-ஒரு எழுத்தாகிய பிரணவமும், ஐந்து எழுத்து-பஞ்சாட்சரங்களும், ஈர்எழுத்து எத்தி-ஆகிய இரண்டெழுத்துகளையுந்துதிசெய்து, வலம்-வன்மையுடையனவாகிய, ஆறுஎழுத்து அங்கிவடிவு ஆம்-சடாக்கர நெருப்பு மயமான, கடாசல வாசல் புகுந்து-பெரியகாட்டைப்போலும் மலையைப்போலு முள்ளவாசலில் நுழைந்து, ஊறு-ஆங்குசுரக்கின்ற அமிர்தம் உண்-அமிர்தத்தைப் பானம் பண்ணுகின்ற, சிவயோகிக்கு-சிவயோகிகளுக்கு, இது-இவ்வெழுத்துகள், உற்பனமே-புதுமையையுண்டாக்குவதேயாம். (எ-று.) (81)

உற்பனமாகியவோங்காவரட்டத்தையூடுருவி
யற்பனவாக்கையி னுள்ளேசிவாவெனுமக்கரத்தைச்
சற்பனபாடைக்குந்தாயாறெழுத்திணுட்டாக்கியப்பா
னிற்பவர்யோகிதபசழியாதிதுநிச்சயமே.

(இ-ள்.) உற்பனம் ஆகிய-உயர்ந்ததாகிய, ஓங்காரம் வட்டத்தை-பிரணவாகாரத்தை, ஊடுருவி-கடந்துசென்று, அற்பு அன ஆக்கையின் உள்ளே-அன்பான சரீரத்தில், சிவாஎனும் அக்கரத்தை-சிவா என்னும்பஞ்சாக்கரத்தை சற்பனபாடைக்கும் தாய்-எல்லாமொழிகளுக்குந்தாயாகிய, ஆறெழுத்து இட்டு ஆகி-சடாக்கரத்தை விட்டு, நிற்பவர்-இருப்பவர்களாகிய, யோகி-யோகியர்களின், தபசு-தவமானது, அழியாது, கெடமாட்டாது, இதுநிச்சயம்-இது உண்மை. (எ-று.) (82)

நிச்சிநிலாக்கொழுந்தாறெழுத்தங்கியைநின்மலமா
யுச்சியுமூலமுநோக்கிரண்டாலமைத்தோரெழுத்தா
லச்சினைநாட்டிச்சிவாக்கினிமூட்டிநெஞ்சண்டபிண்டம்
வச்சிரயோகியவனேவயிரமகாசித்தனே.

(இ-ள்.) நிச்சிநிலாக்கொழுந்து-உண்மையான இளமையான குளிர்ந்த தன்மையுள்ள, ஆறு எழுத்து அங்கியை—சடாக்கரங்களாகிய சட்டையை, நின்மலமாய்—பரிசுத்தமானதாகக்கொண்டு, உச்சியும் மூலமும்-மேல் மூலத்திலும் கீழ் மூலத்திலும் வைத்தணிந்து, நோக்கி—தெரிசித்து, இரண்டாம் ஐம்பத்தோர் எழுத்தாம்-இரண்டெழுத்தாகவும், ஐம்பத்தோர்எழுத்தாகவுமுள்ள, அச்சினை நாட்டி-மூலத்தை நிறுத்தி, சிவாக்கினி மூட்டி-சிவம் என்கிற நெருப்பைமூட்டி, நெஞ்சு இருதயத்திலும், அண்டபிண்டம்-வெளியிலும் உள்ளி

லும் ஒரேதன்மையாகக் காணுகிற, வச்சிரயோகி அவனே-பலமுள்ள யோகியே, வயிரமகா சித்தன்-அசையாச்சித்தனுவான். (எ-று.) (83)

சித்தனுஞ்சீவனுந்தேகமும்வாசியுஞ்சேவைசெய்யும்
பத்தனும்பாசமுமாறெழுத்தேத்திப்பதனமதாய்
கத்தனுங்கப்பலுங்காற்றுங்கடலுங்கயிறுங்கள்ள
வெத்தனும்பாதையும்பார்த்தோட்டுவார்கரையேறுவரே.

(இ-ள். சித்தனும்-பரமேஸ்வரனும், சீவனும்-ஆன்மாவும், வேகமும்-விரைவும், வாசியும்-சாரமும், சேவை செய்யும் பத்தனும்-வணங்கிப்பணிகின்ற அடியவனும், பாசமும்-மாய்கையும், ஆறு எழுத்தேத்தி-சடாக்கரதியானஞ் செய்து, பதனமதாய்-பத்திரப்பட்டவர் களாய், கத்தனும்-தலைவனுயும், கப்பலும் காற்றும் கடலும் கயிறும் கள்ள எத்தனும் பாதையும் பார்த்து-கப்பலையும் காற்றையும் கடலையும் கயிற்றையும் கள்ளத்தந்திரக் காரனையும் வழியையும் கண்டறிந்து, ஒட்டுவார்-செலுத்துகின்றவர்கள், கரை ஏறுவர் - ஜென்மம் என்னும் கடலினின்றும் கரையேறு வார்கள். (எ-று.)

இதனை;

" தனியனேன் பெரும்பிறவிப்பௌவத்தெவ்வத்
தடந்திரையிலெற்றுண்டுபற்றொன்றின்றிக்
கனியைநேர்துவர்வாயாரென்னுங்காலாற்
கலக்குண்டுகாமவான்சுற வின்வாய்ப்பட்
டினியென்னேயுய்யுமாறென்றென்றேங்கி
யஞ்செழுத்தின்புணை பிடித்துக்கிடக்கின்றேனை
முனைவனேமுதலந்த மில்லாமல்லற்
கரைகாட்டியாட்கொண்டாய் மூர்க்கனேற்கே"

என்பதாலறிக. (84)

ஏறுவதுகண்செவிமூக்குநாக்குநெஞ்சம்மிரண்டு
கூறுசெய்தந்தரங்கத்தேநமதுகுருவெனவே
தேறுவதாதியுமந்தமுந்தாங்கிச்சிவநடுவா
யாறுதலம்வரையாரையும்பார்ப்பதிவ்வாறெழுத்தே.

(இ ள்.) ஏறுவது—உயர்ந்ததாகிய, கண் செவி மூக்கு நாக்குநெஞ்சம் இவற்றை, இரண்டு கூறு செய்து-இரண்டாகப் பிரித்து, நமது குரு என அந்தரங்கத்து கதறுவது-நமது குருவென்று உட்கிடையில் தெளிவடைவதுவும், ஆதியும் அந்தமும் தாங்கு—இவ்விரண்டையுஞ் சுமக்கின்ற, நடுவாம்-மத்தியிலுள்ளதான, சிவம்-சிவபெருமான்முதலிய, எல்லாத்தேவர்களையும், ஆறுதலம் வரை-மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞயாகிய ஆறுதாரம் வரைக்கும், பார்ப்பது - பெரியோர்களால் பார்க்கப் படுவது, இஆறு எழுத்தே-இச்சடாக்ஷரங்களே யாம். (எ—று.) (85)

ஆறெழுத்தோரெழுத்தாற்பெறவாசியையச்சமின்றி
யாறெழுத்தோரெழுத்தாற்கடிவாளமிட்டந்தாங்கத்
தாறெழுத்தோரெழுத்தாற்கல்லணையைவைத்தங்கவடி
யாறெழுத்தீரெழுத்தோரெழுத்தேற்றிடவாநந்தமே.

(இ-ள்.) ஆறு எழுத்து ஓர் எழுத்தால்—சடாக்கரத்தாலும் பிரணவத்தாலும் பெறு-பெற்ற, வாசியை-வாசியாகிய குதிரைக்கு, அச்சம்இன்றி-யாதோர் பயமுமில்லாமல், ஆறுஎழுத்து ஓர் எழுத்தால்-மேற்படி எழுத்துகளாலேயே, கடிவாளம் இட்டு-கடிவாளத்தைப் போட்டு, அந்தாங்கத்து-மறைவில், ஆறு எழுத்து ஓர் எழுத்தால் - மேற்படி எழுத்துகளாலேயே, கல்லணமுதலியவற்றை வைத்து, ஆறு எழுத்து ஈர் எழுத்து ஓர் எழுத்துஎற்றிட ஆநந்தமே-மேற்படி எழுத்துக்களையே அதன்மேல் எற்ற மிக்க ஆநந்தமுண்டாகும். (எ-று.) 86)

அந்தத்தின்பின்கலையாதியிலேயிடையச்சமின்றி
விந்தத்திற்பாய்ந்துசுழிமுனைபோய்ப்பெருவெள்ளத்துள்ளாப்
பந்தத்தனற்கதிர்பான்மதிநாதப்பரப்புமுப்பா
ழிந்தக்கண்காட்சிக்கப்பாலென்னையாண்டவிறையிருப்பே.

(இ-ள்.) அந்தத்தில் பின்கலை-கடைசியிற் பின்கலையிலும், ஆதியில் இடை-முதலில் இடகலையிலுமாக. ஆக்கி பிராணுயாமம்பண்ணி, வா-வந்து, விந்தத்தில் பாய்ந்து-மலையென்னும் உயர்ந்த இடமான மேருவிற் சென்று, சுழிமுனைபோய்-அக்கினிநாடியிற்புகுந்து, பெருவெள்ளத்துள் ஆய்-பெரியவெள்ளத்தினுள்குளிர்ந்து, பந்தம்-ஒன்றோடொன்ருகவிணைந்த, தணல்கதிர்-நெருப்புமயமான சூரியனையும், பால்மதியும்-வெள்ளிய சந்திரனையும், எழுநாபாழ்பும் அக்கினியையும் பரப்புகின்ற, முப்பாழ்—முப்பாழாகிய,இந்தக்கண்காட்சிக்கு இந்தத்தோற்றத்திற்கு, இப்பால்-மேற்பாங்கர், என்னைஆண்ட இறை-என்னை அடிமைகொண்ட இறைவனுடைய, இருப்பு-இடமாம். (எ-று.) (87)

இறையிருக்கும்திடமெய்தினுங்கந்தனிடம்புகுந்தான்
மறையிருக்குங்கலைக்கொப்பறுமட்டுமருவலன்றிச்
சிறையிருக்கும்படியித்தலங்கொஞ்சஞ்சிணுக்கைவிட்டோர்
துறையிருக்கத்துறைசென்றூடக்கன்னித்தொடக்கறுமே.

(இ-ள்.) இறை-இறைவன், இருக்கும்-வேதத்தில், திடம் எய்தினும்-தேர்ச்சிஅடைந்திருந்தாலும்,கந்தனிடம் புகுந்தான்-அதன்உண்மையை நன்குணாகுமாக்கடவுளிடம் வந்தான், மணமிருக்குங்கலைக்கு ஒப்பறும்-வேதத்திற் சொல்லப் படுகின்ற கலையினெப்பில்லான், மட்டும்-அளவும், மருவல் அன்றி-இருப்பதேயல்லாமல், சறையிருக்கும் சிறையிலிருப்பதுபோல, இவ்வலம் கொஞ்சம் சிணுக்கைவிட்டோர்-இந்தப்பலமுள்ள தொழிலைவிட்டவர்கள், துறையிருக்க-ஒருதுறையிருக்க, அதைவிட்டு, துறைசென்று-நற்றுறைசென்று, ஆட-முழுக, கன்னித்தொடக்கு அறும்-மாய்கை ஒழியும். (எ-று.) (88)

தொடக்கறுமின்பமுந் துன்பமுங்காட்டிச்சுமந்தலையும்
விடக்கருமெய்பொய்விருப்பும்வெறுப்பெனும்வெட்டவெளி
நடக்கிறபாதைநடக்கறியாமனடக்குமிந்தச்
சடக்கறுப்பார்மனமற்றதெல்லாங்கெடிசாத்திரமே.

(இ-ள்.) தொடக்கு அறும் இன்பமும் துன்பமும் காட்டி சுமந்து அலையும்-பந்தமற்ற இன்பத்தையும், துன்பத்தையும் வெளிப் படுத்தி அவைகளைச் சுமந்து அலைந்து திரிகின்ற, விடக்கரும்-சரீரமும், மெய், பொய் விருப்பும் வெறுப்பும்-மெய்யும், பொய்யும் விருப்பமும், வெறுப்பும், என்னும்-என்று சொல்லுகின்ற, வெட்டவெளி-வெறுவெளியும், நடக்கிறபாதை நடக்க அறியாமல்நடக்கும்-நடக்கிற வழிநடக்க அறியாதபடி நடக்கும், இந்தச்சடக்கு அறுப்பார்-இந்தத் துன்பத்தை அழிப்பவர்களுடைய, மனமற்றது எல்லாம்-மனமிறந்த வழிகளெல்லாம் கெடி சாத்திரமே- வெற்றி பெற்ற சாத்திரபலனும். (89)

சாத்திரம்வேதஞ்சமயம்வண்ணாத்திதண்ணீரில்விட்ட
மூத்திரம்போம்படிபோமனனேயந்தமூத்திரமோர்
பாத்திரங்கொள்ளப்பலனுண்டதினொருபாழுமில்லை
கோத்திரமுங்குலமுங்குடிபோய்நின்னைக்கூடினர்க்கே.

(இ-ள். சாத்திரம்-ஆறுசாத்திரங்களும், வேதம்-நான்குவேதங்களும், சமயம்-நால்வேறு வகைப்பட்ட அறுவகைச் சமயங்களும், ஆனவை-ஆகிய அவைகள், வண்ணாத்தி-வண்ணாத்தியானவள், தான் துணி வெளுக்குந் துறையில், விட்ட-வெளிவிட்ட, மூத்திரம்போம்படிபோம்-மூத்திரமானது போனது போல் போய்விடுவனவாம். அந்தமூத்திரம் ஒருபாத்திரம் கொள்ள-அம்மூத்திரத்தை ஒரு பாண்டத்திற் பிடித்துக்கொண்டால், ஒருவகைப்பயன் உண்டு, நின்னைக் கூடினர்க்கு-உன்னை இரண்டறச் சேர்ந்த ஞானிகளுக்கு, அதின் ஒருபாழும் இல்லை-அச்சாத்திர முதலியவைகளால் யாதொருபலனு மில்லை, கோத்திரமும் குலமும் குடிபோம்-அவர்கள் முன் கொண்டிருந்த கோத்திரங்களும், குலமும் செட்டுப்போய் விடும். (எ-று.) (90)

கூடினதாருங்கைகொண்டவனொருகுருக்களெவன்
பாடினமந்திரமாறுமுன்னைங்கும்போய்ப்பாரிருணீ
வீடினபோதுமெய்ஞ்ஞானவதீதவிலாசவெள்ள
நாடினதும்மங்குநின்றதுநீ வள்ளிநாயகமே.

(இ-ள்,) பார்இருள்-உலகத்தின்கண் அஞ்ஞான இருளை, நீ வீட்டின போது-நீ ஒட்டின காலத்தில், மெய்ஞான அதீத விலாசவெளிநாடினதும்-உண்மை ஞானா தீதமான விலாசவெளியை நான் காடினகாலத்தில், அங்கு நின்றதும்-அவ்விடத்தில் வெளிப்பட்டு நின்றதும், நீ-நீயேயாவாய், வள்ளி நாயகமே-வள்ளிநாய்ச்சியாருக்குத் தலைவனே, (அப்பொழுது,) கூடினதார்

என்னைச்சேர்ந்தவன், கைகொண்டவன் ஆர்-என்னையாட்கொண்டவன் யார், குருக்கள் எவன்-எனக்கு ஆசாரிமூர்த்தியார், பாடின மந்திரம் ஆறும் முநான்கும்-வேதத்தில் சொல்லப்பட்ட ஆறெழுத்து மந்திரங்களும் துவாதசாந்தம் என்னும் வெளியும், பொய்-பொய்யேயாம். (எ-று.)

இக்கலித்துறையில் 'கூடினதார் குருக்கள் எவன், என்பது;
"நானூர் என்னுள்ளமார் ஞானங்களார்" என்பதுபோல் நின்றது. (91)

நாயகனீயெனநானேதுநானென்னநம்பலுன்னைத்
தாயகமென்னுந்தரமேதிறுசொல்லுந்தானிறந்தும்
போயகமும்புறமும்போன்றதாம்பரிபூரணத்தே
யாயகலாதிடமொன்றாகக்காட்சியறப்பெற்றதே.

(இ-ள்.) உறுசொல்லும் தான் இறந்தும்போய் - சொல்லும் சொல்லையுடைய ஜீவாண்டமும் இறந்துபோய், அகமும்புறமும் போன்றது ஆம்பரிபூரணத்து-உள், வெளியாவும் தானேயாம் நிறைவில், ஆய்-கலந்து, அகலாது-ஆங்கு உன்னைவிட்டு நீங்காது, இடம் ஒன்றாக-உன்னிடமும் என்னிடமும் ஒன்றேயாக, அறகாட்சிபெற்றதே-இரண்டற்றகாட்சியைப் பெற்றமாத்திரத்திலேயே, நாயகன் நீயென-நீஒருதலைவன் எனச்சொல்ல நான் எங்கிருந்தேன், நான் என்னைநம்பேன்-நான் என்று ஒருபொருள் அங்கிருந்ததாக-நான் என்னை நம்பமாட்டேன், உன்னைதாயகம் என்னும் தரம் ஏது—உன்னை அவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் முன்காரணம் நீயே என்று சொல்லும் தன்மையுமில்லை. (எ-று.)

என்றதை;

"தானான தன்மயமேயல்லாலொன்றைத்
தலையெடுக்கவொட்டாது தலைப்பட்டாங்கே
போனாலுங்கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்பதல்லாதுபுலம்வேறின்றாம்."

என்பதால் அறியக்கடவர். (92)

பெற்றாலும்பொய்பிறப்பித்தாலும்பொய்பெண்டிர்பிள்ளையும்பொய்
உற்றாரும்பொய்யுலகத்தாரும்பொய்நம்முடற்பயிர்பொய்க்
கற்றார்பிதற்றலும்பொய்சமயாதிக்கடவுளர்பொய்
முற்றாமுலைவள்ளிபங்கனெங்கோன்மெய்யன்முன்னிற்கவே.

(இ-ள்.) முற்றா முலைவள்ளிபங்கன் எங்கோன் மெய்யன் முன்நிற்க-முதிராத்தனமுள்ள வள்ளிநாச்சியாரை ஒருபக்கத்திலுள்ள என் தலைவனை உண்மைக்கடவுளான முருகன் முன்நின்று வெளிப்படுவானானால், பெற்றாலும் பொய் பெற்றவளும் பொய் - தாய் தந்தையர்கள் பயனற்றவர்களாவார்கள், பெண்டிரும் பிள்ளைகளும்பொய்-பெண்டாட்டியும் பிள்ளைகளும் பயனற்றவர்களே! உற்றாரும்பொய் உலகத்தாரும் பொய்-சுற்றத்தாரும், உலகத்தி

லுள்ளவர்களும் பயனற்றவர்களே! நம் உடற்பயிர்பொய்-பயிர்போற் பிறந்துகொண்டேவருகின்ற உடலும்பொய்யே, கற்றூர் பிதற்றலும்பொய்-கற்றவர்கள் சொல்லிக்கொண்டு திரியும் கலைஞானம் பயனற்றதே, சமயாதி கடவுளர்பொய்-உலகமும் விஷ்ணு முதலிய கடவுளர்களும் பொய்யே. (எ-று.)

இறைவனருள்பெற்றூர்க்கு எதுவும் வேண்டாம் என்றபடி. (93)

முன்னிற்பதாரவன்முன்னிற்பதாருமுருகனவன்
னென்னிற்கும்வெம்பகலோவிருளோதெய்வம்வேறுளதோ
தன்னிற்குந்தன்னிழறன்னிடமானவத்தன்மையைப்போல்
உன்னிற்குமுன்னிழனுனுன்னிடத்திலொடுக்கங்களே.

(இ-ள்.) தன்னிற்கும் தன்னிழல் - தன்னிடத்திருக்கின்ற தன்நிழலானது, தன் இடம் ஆன அதன்மையைப்போல்-தன்னிடத்தைவிட்டுப்பிரியாத தன்மையைப்போல, உன்னிற்கும் உன்னிழல்-உன்னுடைய நிழலானது உன்னிடத்திலேயே இருக்கும், நாம்-நாங்களெல்லாரும், உன் இடத்தில் ஒடுக்கங்கள்-உன்னிடத்தில் அடங்கியிருக்கவேண்டியவர்கள், (ஆதலான்) முன்நிற்பது ஆர் - என் முன்னேநிற்பதுயார்? முருக ஐய! - முருகனே! தலைவனே! வெம்பகலோ—கொடுமையையுடையபகலோ? இருளோ-இருட்டோ? வேறு தெய்வம் உளதோ-வேறுதெய்வங்களுண்டோ? என்நிற்கும்-எதுவும் உனக்கு முன்நிற்காது. (எ-று.)

இதனை.

"நாளென் செயும்வினை தானென்செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங்கடம்பு மெனக்குமுன்னேவந்து தோன்றிடினே"

என்பதாலறியக்கடவர். (94)

ஒடுக்கமுந்தோற்றமுமுன்னையல்லாதில்லையுன்னையுன்னற்
படுக்கவிரட்சிக்கவும்பாரிருவினைப்பந்தமறு
மிடுக்கமுமின்பமுமில்லாதிடத்திலிருவருமற்
றடுக்கவுமுன்றனைச்சென்றுடுதீர்த்தம்வந்தாடினதே.

(இ-ள்.) ஒடுக்கமும் தோற்றமும் உன்னை அல்லாது இல்லை-அழிவதும், பிறப்பதும் உன்னுணையாலல்லாமல் இல்லை. உன்னை உன்னின்-உன்னை உள்ளபடி எண்ணினல், படுக்க இரட்சிக்கவும் பார்—நான் அடங்கும்படி ரட்சிப்பதற்கு கடைக்கண்ணுல்பார், இருவினை பந்தம் அது உம்-நல்வினை, தீவினை என்கிற இரண்டுவினைப்பற்றும், இடுக்கண் உம் இன்பமும்-துன்பமும் இன்பமும், இல்லாத இடத்தில்-இல்லாத இடத்திலே, இருவரும் அற்று அடுக்கவும்-இரண்டற்று இருவரும் கலக்கவுமே, உன்னை சென்று-உன்னிடம்வந்து, ஆடுதீர்த்தம் - வந்து யாவரும்குளிக்கின்ற நீரில் வந்து, ஆடினது-குளித்ததாம். (எ-று.)

உன்னுடன் இரண்டறக்கலத்தற்காகவே நான் செய்தசெயல்களெல்லா மென்பது கருத்து. (95)

ஆடினபம்பரமோகயிறேவெறிந்தானிடமோ
சாடினதாபரமோவசைபோனதென்றன்னுயிருங்
கூடினநம்மையப்பனுமுன்றன்படுகுழிவீழ்ந்
தோடினதெவ்விடமவ்விடநீயென்றுணருவதே.

(இ-ள்.) ஆடினபம் பரமோகயிறே எது இடமோ-சுற்றினபம்பரமோக யிறேயாதோ இடம்? சாடினதாவரகமா சங்கமமோ-அசைந்த மரமுதலியவை களோ சங்கமங்களோ? தனது உடனே-தன்னுடையபொருளுடனே, கூடின அம்மையப்பனும்-சேர்ந்த அம்மையும் அப்பனுமாகிய, உன்றன்-உன்னுடைய படுகுழி வீழ்ந்து ஓடினது-துன்பக்குழியில் விழுந்து நீங்கினது, எவ்விடம்-எந்தஇடமோ, அஇடம்-அந்த இடமே, நீஎன்று உணருவதே நீ-என்று உண ரக்கூடின இடமாம். (எ-று.)

உன்றன் என்றது இடங்கொண்டது. (96)

உணராதபோகமுரையாதவுடற்பொருளாவியொன்றைப்
புணராதபோகம்புரையற்றசோதிப்புலன்குறைய
மணவாதவாசமகிழாதவாநந்தவள்ளிபங்கன்கங்
கணமாகியென்னைப்பிரியாச்சிவநின்றன்கண்வடிவே.

(இ-ள்.) நின்றன்கண்வடிவு - உன்னுடையவடிவமானது, உணராதபோ தம்-யாவராலுந்தெரிந்து கொள்ளமுடியாத ஞானவடிவாம், உரையாத-சொல் லப்படாத, உடல் பொருள் ஆவி-உடல்பொருள், ஆவி என்னும் மூன்றில், ஒன்றை ஒன்றையாவது, புணராதபோகம்-கலக்காத அநுபவமாகும், புரை அற்றசோதி-குற்றமற்ற தேஜோமயமாம், புலன்குறையும்-பஞ்சேந்திரியங்க ளும் இளகும்படி, மணவாதவாசம்-வீசாதமணம், மகிழாத ஆநந்தம்-களிக்காத களிப்பு, மன்இடம்-நிலைக்கின்ற இடம், கங்கணமாகி-காப்பாய், என்னைப்பிரி யாதசிவம்-என்னைவிட்டு நீங்காத சிவவடிவமேயாம். எ-று.) (97)

வடிவம்பொருளருண்முக்குணம்வாக்குமனமுமடி
முடிவுமில்லாதமுடிவினைச்சூட்டிமுருகனென்றே
படிகந்தனிற்கண்டகாக்ஷிப்பிரபஞ்சபார்வையற்றால்
விடியும்பொழுதிலிரண்டுமொன்றேதெய்வம்வேறில்லையே.

இ-ள்.) வடிவம்-சொரூபமும், பொருள்-உண்மைப்பொருளும், அருள்-திருவருளும், மூக்குணம்-மூன்றுகுணங்களும், வாக்கும்-சொல்லும், மனமும்-மனமும், அடிமுடிவும் இல்லாத-உற்பத்தியும் நாசமுமில்லாத, முடிவினை-மேற்பொருளை, சூட்டி-கலந்து, முருகன் என்றே—அப்பொருள் முருகனே யென்று, படிகந் தன்னுள் கண்டகாட்சி படிகம்போற் கண்டதோற்றமாகிய,

பிரபஞ்சப்பார்வையற்றால்-உலகப்பார்வைவிட்டொழிந்தால், விடியும்பொழுதில்-ஒருநாளிலுண்டாகின்ற, இரண்டும் ஒன்றே-பகலும் இரவுமாகிய இரண்டும் ஒன்றேயாம், வேறுதெய்வம் இல்லை-வேறாக ஒரு கடவுளில்லை. (எ-று)

இல்லையுண்டென்பதிரண்டுஞ்சொல்லாதவிடமதுன்னைக்
கல்லையுஞ்செம்பையுமண்ணையுங்கூட்டிக்கனிவுறாத
வொல்லையிற்போனவுயிருடன்கூடியுதவிசெய்யா
தல்லையிற்சுத்தத்தவராகவன்புற்றாற்றுவதே.

(இ-ள். இல்லை உண்டுஎன்பது இரண்டும்-உண்டுஇல்லை என்கிற இரண்டும்,சொல்லாத இடம் அது உன்னி-சொல்லமுடியாத இடத்தை எண்ணி, கல்லையும் செம்பையும் மண்ணையும் கூட்டிகனி அது உறாது-மேற்படி பொருள்களைக் கூட்டிக்கனிக்காமல், அல்லையிற்சுத்தத்தவராக-குற்றமற்ற சுத்தமுடையவராய், அன்புற்று-அன்பையடைந்து, ஆற்றுவதே-துதிசெய்வதே நன்மையாம். எனெனில், ஒல்லையில்-விரைவில், போனஉயிரானது-உன்உடலைவிட்டுப்போன வுயிரானது, உடன்கூடி-மறுபடியும் வந்து, சேர்ந்து, உதவிசெய்யாது-ஒத்தாசைசெய்யாது. ஆகையால். (எ-று. (99)

அாற்றலுமக்களிப்பும்மின்னதென்னவோராகமத்தாற்
பரத்தலும்பேசப்படாமையெங்கும்பராபரமாய்
நிரத்தலுமொன்றுநிரவாதமையுநினைப்புமறப்
பிறத்தலுமெய்தலுமில்லாததோற்றநீயெவ்வண்ணமே.

(இ-ள்.) அாற்றலும்-எல்லா உயிர்களுக்கும் உரைத்தலும், மிக்கு-மிகுதியும், அளித்தலும்-காப்பாற்றுதலும்,இன்னது என்ன-இப்படியாதமென்று ஓர் ஆகமத்தால் பரத்தலும் பேசப்படாமையும்-ஒரு ஞான நூலாலாவது சொல்லப்படாமையும், எங்கும் பராபரமாய் நிரத்தலும்-எவ்விடத்தும் நிறைந்தவனாய் நிறைதலும், ஒன்றினில் நிரவாமையும் - ஒவ்வொன்றில் கலவாமையும், நினைப்பும் அறப்பிறத்தலும் ஒய்தலும்-நினைப்பும் மறப்பும் அற்றுப்பிறப்பதும் இறப்பதும், இல்லாததோற்றம்நீ-இல்லாதகாட்சிப்பொருள்நீயேயாவாய், எவ்வண்ணம்-நீ அப்படியானவிதம் எப்படி? (எ-று.). (100)

எவ்வண்ணமெவ்வுருவெவ்வுயிரெவ்விடமென்றறியாச்
செவ்வண்ணவூமன்கனவுரையற்றநின்சேவடியாய்ச்
சவ்வண்ணமென்றான்சங்கரிகோபத்தைத்தான்கவர்ந்த
தவ்வண்ணமாதிமறைபேசவையமறிந்ததுவே.

(இ-ள்.) எவ்வண்ணம் - எப்படி, எவ்வுரு - எந்தவடிவம், எவுயிர்—எந்த உயிர், எஇடம்-எந்த இடம், என்று அறியா-என்று எதையும் சொல்லவுணராத செவ்வண்ணவூமன்கனா-நல்ல ஊமனுடைய கனாத்திறம்போல,உரையற்ற நல்

சே அடியாய்-சொல்லற்றநல்ல திருவடியையுடையவனே, சவ்வண்ணம் என்று அரன் சங்கான் கோபத்தைதான் கவர்ந்தது-சிவபெருமானுடைய கோபத்தை ஒருபயனுமில்லாததாக விழுங்கியதை, ஆதிமறைபேச-வேதஞ்சொல்ல, வையம் அறிந்தது-உலகத்தார் தெரிந்துகொண்டார்கள். (எ-று. (101)

வையஞ்சலமங்கிகால்வான்பலவுயிர்வான்முடியோ
டெய்யும்பாமுதல்சார்வதெல்லாமெம்பிரான்முருகா
தெய்யெனநின்றுநின்றாட்சிலம்போசைத்திருவிளையாட்
டையநின்னங்கமதென்னங்கமாய்நின்றவாநந்தமே.

(இ-ள்.) வையம்-பிருதிவியும், சலம்-அப்புவும், அங்கி-தேயுவும், கால்-வாயுவும், வான்-ஆகாசமும், பலவுயிர்-பலவுயிர்களும். வான்முடியோடு எய்யும்-அதன் உச்சியுடன் கலந்த, பரம் முதல் சார்வது எல்லாம்-உயர்ந்த, பொருளைச்சேர்வதெல்லாம். எம்பிரான் முருகா-எம்பெருமானாகிய முருகன், தெய் எனநின்று தெய் என்கிற ஒலியுடன் இருந்து. நின்தாள் சிலம்பு ஓசை-உன்னுடைய திருவடிகளிற்றரித்த சதங்கை ஓசையையுடைய திருவிளையாட்டும், ஐய-தலைவனே! நின் அங்கம்-உன்னுடைய உண்மைச்சொருபமும், என் அங்கம் ஆய் நின்ற ஆநந்தம்-என்னுடைய கண்களாற் கண்டு களித்தனவாம். (எ-று.) (102)

ஆறெழுத்தந்தாதி மூலமும்-விரிவுரையும்.

முற்றிற்று.

சுபம் வரகல்யாண பார்வதி யந்திரம்.



இந்த யந்திரத்தை தகட்டில் விதிப்படி செதுக்கி பூஜைசெய்து வந்தால், தனுக்கிறஷணம் ஜனுக்கிரஷணம் முதலானதும் உண்டாவதும் தவிர இந்த எந்திரம் உள்ள இடத்தில் சர்வ மங்களமான் சந்துஷ்டியடைந்திருப்பார்கள். இதின் பூரண ப்ரபாவம் தேவிபூஜா கிரந்தம் தெரிந்தவர்களுக்கு நாம் சொல்லாமலே விளங்கும்.

இதில் அக்ஷரம் அடைக்கிற விஷயமும் யந்திர தாம்பிர யந்திரம் வேண்டுவோரும், அடியிற்கண்ட விலாஸத்திற்கு நேறிலும் தபால் மூலாமாகவும் தெரிந்துகொள்ளலாம்.

முன்சொன்ன சுப்ரமண்ய யந்திரத்திற்கும் சுலோகப்படி பீஜம் அடைப்பதும் தவிர ஷஸாங்க முறைமைப்படியும் பீஜங்கள் அடைத்து தாம்பிரத்தட்டில் செய்து கொடுக்கப்படும்.

சார்ச விவரம் யாவும் அடியிற்கண்ட விலாசத்திற்கு யெழுதவும்.

59773

இ. எஸ். நடேஸ தேசிகர்.

நெ. 110 குருவப்பசெட்டி தெரு சிந்தாத்திரிப் பேட்டை மதாரஸ்.

4A
10-109

முக்கிய கவனிப்பு.

கீழ்கண்ட புஸ்தகமும் இன்னம் இதரபுஸ்தகங்கள் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதினால் வீ. பீ. தபால் மூலியமாய் அனுப்பப்படும், தபால் சார்ஜ் பிரத்யேகம்.

	ரூ.	அ.
ஸ்ரீ மகாபாரதம் 18-பருவம் படத்துடன் 4-வால்யமாக கலிகோ பயிண்டு கட்டிய செட் 1-க்கு ...	15	0
அற்புத பூலோகரம்பை ... கதை படத்துடன் ...	1	0
மணிமந்திர வைத்திய சேகரம்	1	0
சாதகாலங்காரம் மூலமும் — ... உரையும்	2	0
கணித முருகசேகரம் ...	1	0
ஹோராசாஸ்திரம் ...	1	0
கௌசிகசிந்தாமணி-1-பாகம் ...	0	14
ஷை 2-பாகம் ...	1	4
ஷை 3-பாகம் ...	1	0
ஷை மூன்றுபாகம் சேர்ந்தது ...	3	0
சர்வ கனவின்பலன் ..	0	4
களவுகாணும் சாஸ்திரம் ...	0	4
ஆயுள்வேத சுருக்கம் ...	0	12
ஆறெழுத்தந்தாதி ...	0	2
ஆறெழுத்தந்தாதி ... மூலமும் உரை. ...	0	12
நித்யானுசந்தானம், ...	1	0
ஷை வடகலை ...	0	12
கிருஷ்ன சுவாமி தூது, திக்கு.	0	8
ஷை தின் ...	0	6
புலிப்பாணி சோதிடம். ...	0	12

	ரூ.	அ.
ஸ்ரீமத் கந்தபுராணம் வசனம் 132-படத்துடன் சேர்ந்து ...	5	0
நிகண்டு 12-தொகுதியும் ...	1	8
11-வது நிகண்டு	0	12
நந்தனார் சரித்திர கீர்த்தனை சிதம்பரசக்கரத்துடன் திக் ...	0	12
ஷை தின் ...	0	8
ஷை ஆர்ட்பேபர் ...	1	8
தாயுமானவர் சுவாமிபாடல் ஆட்பேப்பர் ...	2	8
ஷை கிளேஸ் ...	2	0
ஷை திக்கு ...	1	0
ஷை தின் ...	0	8
மஸ்தான் சாகிபு பாடல் ஆட்பேப்பர் ...	2	8
ஷை கிளேஸ் ...	2	0
ஷை திக்கு ...	1	8
ஷை தின் ...	0	8
நீதிநெறி அரிச்சந்திர நாடகம்	2	8
சிவசாமி அரிச்சந்திர நாடகம்	1	8
மதுராவீரசாமி கதை. பெ. எ.	0	8
ஷைதின் மந்திர சக்ரத்துடன்	0	6
கதிரேசன் ஆ. களிப்பு பெ. எ.	0	3
சுந்தரசேகரம், 1-ல் பாகம். ...	0	12
ஷை 2-ம் பாகம் ...	0	12

எமது மேல்விலாசம்,

டி. கோபால் அண்டு கோ.,

"கோல்டன் பிரஸ்,"

17-18, காளத்தியப்ப முதலி வீதி, சூளை, மதராஸ்.